Sri Balamanorama Series No. 59.

॥ श्रीः ॥

॥ नीतिशास्त्रम् ॥

தமிழ் உரையுடன்

NĪTI ŚĀSTRA

with Tamil Meaning

Edited by

C. Sankara Rama Sastri, M.A., B.L.,
Advocate, Mylapore, Madras.

Printed and Published By
THE SRI BALAMANORAMA PRESS,
MYLAPORE, MADRAS.

Price] 1958 [75 nP.

K.V. Ravi.

॥ श्रीः ॥

॥ नीतिशास्त्रम् ॥

सभाकल्पतरुं वन्दे वेदशाखोपजीवितम् ।
शास्त्रपुष्पसमायुक्तं विद्वद्भ्रमरशोभितम् ॥ १ ॥

(உரை) வேதங்களாகிற கிளைகளுள்ளதும், சாஸ்திரங்களாகிற புஷ்பங்களோடு கூடினதும், வித்துவான்களாகிற வண்டுகளால் பிரகாசிக்கப்பெற்றதுமான ஸபையென்கிற கல்பவிருக்ஷத்தை நமஸ்கரிக்கின்றேன் என்றவாறு.

(அதாவது) வேதசாஸ்திராதிஸம்பன்னரான பிராஹ்மணர்களின் ஸபையை நமஸ்கரிக்கின்றேன் என்றபடி. (1)

प्रणम्य सर्वलोकेशं देवदेवेश्वरं हरिम् ।
नीतिशास्त्रं प्रवक्ष्यामि सर्वशास्त्रार्थसंमतम् ॥ २ ॥

ஸர்வ லோகேச்வரனும், தேவாதிதேவனுமான ஸ்ரீமந் நாராயணனை நமஸ்கரித்து ஸகல சாஸ்திரார்த்தயுக்தமான நீதி சாஸ்திரத்தை சொல்லுகின்றேன். (2)

धर्म उवाच—

सत्यं माता पिता ज्ञानं धर्मो भ्राता दया सखा ।
शान्तिः पत्नी क्षमा पुत्रः षडेते मम बान्धवाः ॥ ३ ॥

ஸத்தியமாகிற தாய், ஞானமாகிற தகப்பன், தர்மமாகிற உடன்பிறந்தோன், தயையாகிற சிநேகிதன், சாந்தி

யாகிற பார்யை, க்ஷமையாகிற குமாரன் ஆகிய இவ்வாறு பேர்களும் எனக்கு இஷ்டமான பந்துக்களென்று தர்மர் சொன்னார். (3)

भीम उवाच—

प्राणं वापि परित्यज्य मानमेवाभिरक्षतु ।
अनित्यो भवति प्राणो मानस्त्वाचन्द्रतारकम् ॥ ४ ॥

தனக்கு மானஹானிகரமான ஆபத்து வந்தபோது பிராணனையாவது விட்டு மானத்தைக் காற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் பிராணம் க்ஷண பங்குரம், மானமோ ஆசந்திரதாரகமானது என்று பீமன் சொன்னார். (4)

अर्जुन उवाच—

आमन्त्रणोत्सवा विप्रा गावो नवतृणोत्सवाः ।
भर्त्रागमोत्सवा नार्यः सोऽहं कृष्ण रणोत्सवः ॥ ५ ॥

ஸாமான்ய பிராமணருக்கு பரான்னம் ஸந்தோஷகரமானது. பசுக்களுக்கு பசும்புல் சந்தோஷகரமானது. பதிவிரதைகளுக்கு தேசாந்தரம் போயிருந்த தம்முடைய பர்த்தாவினது வரவு ஸந்தோஷகரமானது. ஹே கிருஷ்ண! யுத்தம் எனக்கு ஸந்தோஷகரமானதென்று அர்ஜுனன் சொன்னான். (5)

नकुल उवाच—

मातृवत्परदारांश्च परद्रव्याणि लोष्टवत् ।
आत्मवत्सर्वभूतानि यः पश्यति स पश्यति ॥ ६ ॥

பரஸ்த்ரீயை தாய் போலவும், பரத்ரவ்யத்தை மண்ணாங்கட்டி போலவும், மன்னுயிர்களைத் தன்னுயிர் போலவும், எவன் பார்க்கிறானோ, அவன் பிரஹ்ம ஞானியாவானென்று நகுலன் சொன்னான். (6)

4132-34.

सहदेव उवाच—

अनित्यानि शरीराणि विभवो नैव शाश्वतः ।
नित्यं संनिहितो मृत्युः कर्तव्यो धर्मसंग्रहः ॥ ७ ॥

சரீரங்கள் அநித்தியங்கள், ஸம்பத்து சாசுவதமன்று, மிருத்யுவானவன் எப்போதும் ஸமீபத்திலிருக்கிறான், ஆகையால் தர்ம ஸங்கிரஹமே செய்ய வேண்டுமென்று ஸஹதேவன் சொன்னான். (7)

द्रौपद्युवाच—

सुन्दरं पुरुषं दृष्ट्वा भ्रातरं पितरं सुतम् ।
योनिर्द्रवति नारीणां तथ्यं मे ब्रूहि केशव ॥ ८ ॥

ஸுந்தரமுள்ள புருஷனைக் கண்டால் அவன் உடன்பிறந்தோனாயினும், பிதாவாயினும், புத்ரனாயினும், ஸ்த்ரீகளுக்கு காமம் உண்டாகிறதே அதின் உண்மையான காரணத்தை தெரிவிக்க வேண்டும் ஸ்வாமி. (8)

पञ्च मे पतयः सन्ति मह्यं षष्ठोऽपि रोचते ।
पुरुषाणामभावेन सर्वा नार्यः पतिव्रताः ॥ ९ ॥

எனக்கு ஐந்து பேர் புருஷர்களிருந்தும் ஆறாவது புருஷன் மீதிலும் காமம் உண்டாகிறது. ஆதலால் புருஷர்கள் அகப்படாவிட்டால் எல்லா ஸ்திரீகளும் பதிவிரதைகள் தான். (9)

श्रीकृष्ण उवाच—

औदुम्बराणि पुष्पाणि श्वेतवर्णं च वायसम् ।
मत्स्यपादं जले पश्येन्न नारीहृदयस्थितम् ॥ १० ॥

அத்திப்பூவைப் பார்த்தாலும் பார்க்கலாம். வெள்ளைக் காக்கையைக் கண்டாலும் காணலாம். ஜலத்தில் மீன் காலைக் கண்டாலும் காணலாம். ஸ்திரீகளுடைய ஹ்ருதயத்தை மாத்திரம் அறியக்கூடாது என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொன்னார். (10)

दुर्भिक्षे चान्नदातारं सुभिक्षे च हिरण्यदम् ।
चतुरोऽहं नमस्यामि रणे धीरमृणे शुचिम् ॥ ११ ॥

துர்பிக்ஷ காலத்தில் அன்னதானம் செய்பவனையும், ஸுபிக்ஷ காலத்தில் தனதானம் செய்பவனையும், போர்க்களத்தில் தைரியமுள்ளவனையும், கடனில் சுத்தனாயிருப்பவனையும், நான் நமஸ்கரிக்கின்றேனென்று ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார். (11)

कर्ण उवाच—

विप्रहस्ते धनं दद्यात् स्वभार्यासु च यौवनम् ।
स्वामिकार्येषु च प्राणान्निश्चयो मम माधव ॥ १२ ॥

வாரீர் ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமீ! தான் தேடின பொருளை பிராஹ்மண விநியோகம் செய்ய வேண்டும். யௌவனத்தைத் தன் மனையாளிடத்துக் கழிக்க வேண்டும். தன் பிராணனை ஸ்வாமி காரியத்தில் விநியோகப் படுத்த வேண்டுமென்பது என்னுடைய கருத்து என்றான் கர்ணன். (12)

॥ चाटुवाक्यम् ॥

सर्वस्य गात्रस्य शिरः प्रधानं सर्वेन्द्रियाणां नयनं प्रधानम् ।
षण्णां रसानां लवणं प्रधानं भवेन्नदीनामुदकं प्रधानम् ॥१३॥

தேகம் முழுவதுக்கும் சிரஸ்ஸு பிரதானம். இந்திரியங்களுக்கெல்லாவற்றுள்ளும் நேத்திரம் பிரதானம். ஆறு ரஸங்களுக்குள்ளே லவணம் பிரதானம். நதிகளுக்கு ஜலம் பிரதானம். (13)

मृत्पिण्डमेकं बहुभाण्डरूपं सुवर्णमेकं बहुभूषणात्मकम् ।
गोक्षीरमेकं बहुधेनुजातमेकः परात्मा बहुदेहवर्ती ॥ १४ ॥

பாண்டங்கள் வெவ்வேறு ஆனாலும் மண் ஒன்றே. பணி பல ஆனாலும் பொன் ஒன்றே. பசுக்கள் பல ஆனாலும் பால் ஒன்றே. அதுபோல சரீரம் பல ஆனாலும் பரமாத்மா ஒருவனே. (14)

अर्थातुराणां न गुरुर्न बन्धुः कामातुराणां न भयं न लज्जा ।
विद्यातुराणां न सुखं न निद्रा क्षुधातुराणां न रुचिर्न पक्वम् ॥१५

அர்த்தத்தில் ஆசையுள்ளோருக்கு குருவும், பந்துவுமில்லை. காமாதுராருக்கு பயமும் லஜ்ஜையுமில்லை. வித்யார்த்திகளுக்கு ஸுகமும் நித்திரையுமில்லை. பசியுள்ளோருக்கு ருசியும் பக்குவமுமில்லை. (15)

दाता दरिद्रः कृपणो धनाढ्यः पापी चिरायुः सुकृती गतायुः ।
राजाऽकुलीनः सुकुली च भृत्यः कलौ युगे षड्गुणमाश्रयन्ति ॥१६

தாதா தரித்திரனாகுதலும், கிருபணன் தனாட்யனாகுதலும், பாபி தீர்க்காயுஷ்கனாகுதலும், புண்யாத்மா அல்பாயுஷ்கனாகுதலும், குலஹீனன் ராஜாவாகுதலும், குலசிரேஷ்டன் ஸேவகனாகுதலும் ஆகிய இவ்வாறு குணங்களையும், கலியுகத்தில் அடைகிறார்கள் ஜனங்கள். (16)

भार्यावियोगः सुजनापवादः ऋणस्य शेषं कुजनस्य सेवा ।
दारिद्र्यकाले प्रियदर्शनं च विनाग्निना पञ्च दहन्ति कायम् ॥ १७ ॥

பார்யா வியோகமும், ஸஜ்ஜநரைத் தூற்றுகையும், கடனில் மீதி வைப்பதும், குலஹீநனிடத்து ஸேவையும், தாரித்ரிய காலத்தில் பந்து தரிசனமும், இவ்வைந்தும் சரீரத்தை நெருப்பில்லாமலே தஹிக்கும். (17)

पुस्तकं वनिता वित्तं परहस्तगतं गतम् ।
अथवा पुनरागच्छेत् जीर्णं भ्रष्टा च खण्डशः ॥ १८ ॥

ஒருவனுடைய புஸ்தகமும், ஸ்திரீயும், தனமும் பிறர் கையிலகப்பட்டால் போனதேயாம். ஒருவேளை திரும்பி வந்தாலும் புத்தகம் ஜீர்ணமாயும், வநிதை பிரஷ்டையாயும், தனம் கொஞ்சம் கொஞ்சமாயும் வரும். (18)

आयुर्वित्तं गृहच्छिद्रं मन्त्रौषधसमागमाः ।
दानमानावमानाश्च नव गोप्या मनीषिभिः ॥ १९ ॥

ஆயுஸ்ஸு, ஆஸ்தி, குடும்பத்தில் கலகம், மந்திரம், ஔஷதம், புணர்ச்சி, தானம், மானம், அவமானம் இவ்வொன்பதும், புத்திமான்களாலே, பிறருக்குத் தெரியாமல் காக்கப்படத் தக்கவைகள். (19)

ऋणानुबन्धरूपेण पशुपत्नीसुतालयाः ।
ऋणक्षये क्षयं यान्ति का तत्र परिदेवना ॥ २० ॥

ஸகல ஜனங்களுக்கும், பசுக்கள், மனைவிகள், பிள்ளைகள், வீடுகள் இவை ஜன்மாந்தர ருண சம்பந்தத்தினால் உண்டாகின்றன. ரிணம் தீர்ந்த உடனே நாசத்தை அடைகின்றன. ஆகையால் இவ்விஷயங்களில் வியஸனமேன்? (20)

दूषकश्च क्रियाशून्यो निकृष्टो दीर्घकोपनः ।
चत्वारः कर्मचण्डाला जातिचण्डाल उत्तमः ॥ २१ ॥

பிறரை தூஷிப்பவன், நித்திய கர்மானுஷ்டானத்தை விட்டவன், அதிலோபமுள்ளவன், தீர்க்க கோபமுள்ளவன், இந்நால்வரும் கர்மசண்டாளர். இவர்களைக் காட்டிலும் ஜாதி சண்டாளன் உத்தமன். (21)

राजवत्पञ्च वर्षाणि दश वर्षाणि दासवत् ।
प्राप्ते तु षोडशे वर्षे पुत्रं मित्रवदाचरेत् ॥ २२ ॥

புத்திரனை ஐந்து வயது மட்டும் ராஜன்போலவும், பத்து வருஷங்கள் தாஸன் போலவும், பதினாறும் வயது முதல் ஸிநேகிதன்போலவும் நினைத்து நடக்கவேண்டும். (22)

एकैका गौस्त्रयः सिंहाः पञ्च व्याघ्राः प्रसूतिभिः ।
अधर्मो नष्टसंतानो धर्मः संतानवर्धनः ॥ २३ ॥

ஸிம்ஹங்கள் மும்மூன்றாய் பிறக்கும். புலிகள் ஐந்தைந்தாய் பிறக்கும். ஆனால் அவற்றின் அதர்மம் அவைகளின் ஸந்தானத்தை நாசம் பண்ணுகிறது. பசுக்கள் ஒவ்வொன்றாய்ப் பிறக்கும். ஆனாலும் அவற்றின் தர்மம் அவைகளின் ஸந்தானத்தை விருத்தி பண்ணுகிறது. (தர்மமே விருத்தியை யடையுமென்றபடி) (23)

बालार्कः प्रेतधूमश्च वृद्धस्त्री पल्वलोदकम् ।
रात्रौ दध्यन्नभुक्तिश्च आयुः क्षीणं दिने दिने ॥ २४ ॥

உதயகாலத்து சூர்யனில் காய்வதும், பிணப்புகை பிடிக்கையும், தன்னிற்பெரியாளோடு புணர்தலும், குட்டையாய்த்தேங்கும் அழுக்குநீரைக் குடித்தலும், இரவில் தயிர் சாதம் உண்ணுதலும் ஆகிய இவைகள் நாளுக்கு நாள் ஆயுளைக் குறைக்கும். (24)

वृद्धार्को होमधूमश्च बालस्त्री निर्मलोदकम् ।
रात्रौ क्षीरान्नभुक्तिश्च आयुर्वृद्धिर्दिने दिने ॥ २५ ॥

ஸாயங்காலத்து சூரியனில் காய்வதும், ஹோமப் புகைப்படுதலும், தன்னிற்சிறியாளோடு புணர்தலும், இரவிற் பாலும் சோறுண்ணலும் ஆகிய இவைகள் நாளுக்கு நாள் ஆயுளை வளர்க்கும். (25)

उत्तमं स्वार्जितं वित्तं मध्यमं पितुरार्जितम् ।
अधमं भ्रातृवित्तं च स्त्रीवित्तमधमाधमम् ॥ २६ ॥

தான் தேடிய பொருள் உத்தமம், தகப்பன் வைத்த பொருள் மத்தியமம், உடன்பிறந்தவன் பொருள் அதமம், ஸ்த்ரீதனம் அதமாதமம். (26)

उत्तमं कुलविद्याया मध्यमं कृषिवाणिजात् ।
अधमं सेवकावृत्तिः मृतिश्चौर्योपजीवनम् ॥ २७ ॥

தன் குலவித்யையால் ஜீவித்தல் உத்தமம். வியவஸாயம் வியாபாரத்தால் ஜீவித்தல் மத்தியமம். ஊழியஞ்செய்து ஜீவித்தல் அதமம். திருடிப்பிழைத்தல் இறப்பதோடொப்பாம். (27)

उत्तमे स्यात्क्षणं कोपः मध्यमे घटिकाद्वयम् ।
अधमे स्यादहोरात्रं पापिष्ठे मरणान्तिकम् ॥ २८ ॥

கோபமானது உத்தமனிடத்து க்ஷணப்போதும், மத்தியமனிடத்து இரண்டு நாழிகையும், அதமனிடத்தில் ஒரு இரவும் பகலும், பாபியிடத்தில் மரண பரியந்தமுமிருக்கும். (28)

आत्मबुद्धिः सुखं चैव गुरुबुद्धिर्विशेषतः ।
परबुद्धिर्विनाशाय स्त्रीबुद्धिः प्रलयंकरी ॥ २९ ॥

தன் புத்தி சுகத்தைத் தரும். குரு புத்தி விசேஷ சுகத்தைக் கொடுக்கும். பிறர் புத்தி விநாசத்தைக் கொடுக்கும். ஸ்திரீ புத்தி கொல்லும். (29)

अतिथौ तिष्ठति द्वारि ह्यपो गृह्णाति यो नरः ।
आपोशनं सुरापानमन्नं गोमांसभक्षणम् ॥ ३० ॥

வாசலிலிருக்கும் அதிதியை விட்டு விட்டு சாப்பாட்டுக்கு ஜலம் முதலில் வாங்குகிறவனுக்கு அந்த ஆபோசனம் ஸுராபான துல்யமாகும். அன்னம் கோமாம்ஸ பக்ஷண சமமாகும். (30)

दर्शनाच्चित्तवैकल्यं स्पर्शनात्तु धनक्षयः ।
संभोगात्किल्बिषं पण्यस्त्रीणां प्रत्यक्षरक्षसाम् ॥ ३१ ॥

விலைமாதருடைய காட்சியினால் சித்த வைகல்யமுண்டாகும். மெய்தீண்டலால் தனம் க்ஷயமாகும். புணர்ச்சியால் பாபம் சம்பவிக்கும். ஆகையால் வேஶ்யா ஸ்த்ரீகள் பிரத்யக்ஷ ராக்ஷஸர்களாவார்கள். (31)

दासी मानधनं हन्ति हन्ति वेश्या धनादिकम् ।
आयूंषि विधवा हन्ति सर्वं हन्ति पराङ्गना ॥ ३२ ॥

தாஸியைப் புணர்தல் மானத்தை யழிக்கும். வேசியைப் புணர்தல் தனாதிகளைக் குறைக்கும். விதவைகளைப் புணர்தல் ஆயுளைக் குறைக்கும். பிறர் மனைவியை புணர்தல் எல்லாவற்றையுமழிக்கும். (32)

दुर्जनं काञ्चनं भेरीं दुष्टस्त्रीं दुष्टवाहनम् ।
इक्षुखण्डांस्तिलान् शूद्रान् मर्दयेद्गुणवृद्धये ॥ ३३ ॥

துர்ஜநனையும் பொன்னையும் பேரியையும், துஷ்ட ஸ்திரீயையும், முறட்டுக் குதிரையையும், கருப்பங்கழிகளையும். எள்ளையும், சூத்ரர்களையும் நற்குண விருத்தியின் பொருட்டு அடிக்க வேண்டும். (33)

न गच्छेद्राजयुग्मं च न गच्छेद्ब्राह्मणत्रयम् ।
चतुःशूद्रा न गच्छेयुर्न गच्छेद्वैश्यपञ्चकम् ॥ ३४ ॥

ஒரு காரியத்திற்குப் போகும்போது இரண்டுபேர் க்ஷத்ரியரும், மூன்றுபேர் பிராஹ்மணரும், நான்குபேர் சூத்ராரும், ஐந்துபேர் வைசியரும் போகலாகாது. (34)

उषः शशंस गार्ग्यस्तु शकुनं तु बृहस्पतिः ।
मनोजवं तु माण्डव्यो विप्रवाक्यं जनार्दनः ॥ ३५ ॥

ஒரு காரியத்திற்குப் போவதற்கு உஷக்காலம் நல்லதென்று கார்கிய முனிவரும், சகுனம் பார்க்க வேண்டுமென்று பிருஹஸ்பதியும், இப்பொழுது போனால் காரியம் ஸபலமாகும் என்கிற மனோதைரியமே போதுமென்று மாண்டவியரும், பிராமணன் போகலாமென்றால் போக வேண்டுமென்று ஜனார்தனரும் சொன்னார்கள். (35)

शर्वरीदीपकश्चन्द्रः प्रभातोदीपको रविः ।
त्रैलोक्यदीपको धर्मः सुपुत्रः कुलदीपकः ॥ ३६ ॥

சந்திரன் ராத்திரியை பிரகாசிப்பிக்கிறான். சூரியன் மத்தியான காலத்தை பிரகாசிப்பிக்கிறான். தர்மம் மூன்று லோகங்களையும் பிரகாசிப்பிக்கும். ஸத்புத்திரன் குலத்தை பிரகாசிப்பிக்கின்றான். (36)

स बन्धुर्यो हितैषी स्यात् स पिता यस्तु पोषकः ।
स सखा यत्र विश्वासः सा भार्या यत्र निर्वृतिः ॥ ३७ ॥

மேன்மையைக் கோரினவனே பந்து, காப்பாற்றினவனே தகப்பன். விசுவாச முள்ளவனே ஸ்நேஹிதன். சுகமுண்டாக்க வல்லவளே மனைவி. (37)

अर्थानामार्जने दुःखं आर्जितानां च रक्षणे ।
नाशे दुःखं व्यये दुःखं किमर्थं दुःखभाजनम् ॥ ३८ ॥

திரவியங்களை ஸம்பாதிப்பதிலும் துக்கம். ஸம்பாதித்தவற்றைக் காப்பாற்றுவதிலும் துக்கம். அவற்றினழிவிலும் துக்கம். சிலவிலும் துக்கம். ஆகையால் துக்கத்திற்கு மூலமான தனம் என்ன பிரயோஜனம்? (38)

हरिणापि हरेणापि ब्रह्मणापि सुरैरपि ।
ललाटलिखिता रेखा परिमार्ष्टुं न शक्यते ॥ ३९ ॥

விஷ்ணுவினாலாயினும், சிவனாலாயினும், பிரம்மாவாலாயினும், மற்ற தேவதைகளாலாயினும் தலையிலெழுதின எழுத்தைத் துடைக்க முடியாது. ஆகையால் மனுஷ்யர்களால் ஆகத்தக்கது ஒன்றுமில்லை யென்றபடி. (39)

घृतेन वर्धते बुद्धिः क्षीरेणायुष्यवर्धनम् ।
शाकेन वर्धते व्याधिः मांसं मांसेन वर्धते ॥ ४० ॥

நெய்யால் புத்தியும், பாலால் ஆயுளும், கறிகாய்களால் நோயும், மாம்ஸத்தினால் மாமிஸமும் விருத்தியடைகின்றன. (40)

उत्साहः साहसं धैर्यं बुद्धिः शक्तिः पराक्रमः ।
षडेते यत्र तिष्ठन्ति तत्र देवोऽपि तिष्ठति ॥ ४१ ॥

உற்சாகம், ஸாஹஸம், தைரியம், புத்தி, சக்தி, பராக்கிரமம் இந்த ஆறும் எவனிடத்தில் இருக்கின்றனவோ அவனுக்கு தைவமும் ஸஹாயமாகும். (41)

असंतुष्टो द्विजो नष्टः संतुष्टः पार्थिवस्तथा ।
सलज्जा गणिका नष्टा निर्लज्जा च कुलाङ्गना ॥ ४२ ॥

திருப்தியில்லாத பிராமணனும், திருப்தியுள்ள க்ஷத்ரியனும், வெட்கமுள்ள வேசியும், வெட்கமற்ற குலஸ்த்ரீயும் கெடுவார்கள். (42)

वेदमूलमिदं ब्राह्मं भार्यामूलमिदं गृहम् ।
कृषिमूलमिदं धान्यं धनमूलमिदं जगत् ॥ ४३ ॥

பிராமணருக்கு வேதம் மூலம், கிருஹத்திற்கு பார்யை மூலம், தான்யத்திற்கு கிருஷி மூலம், ஜகத்திற்கு தனம் மூலம். (43)

शिलास्थगन्धलेपश्च मार्जालोच्छिष्टभोजनम् ।
प्रतिबिम्बेक्षणं नीरे शक्रस्यापि श्रियं हरेत् ॥ ४४ ॥

கல்லின்மேல் வைத்த சந்தனத்தை பூசிக்கொள்ளுதலும், பூனை தீண்டிய அன்னத்தை புசித்தலும், நீரில் தன் நிழலைப்பார்த்தலும், ஆகிய இவை இந்திரனுக்கானாலும் ஐச்வர்யத்தைப் போக்கும். (44)

अजारजः खररजस्तथा संमार्जनीरजः ।
स्त्रीणां पादरजश्चैव शक्रस्यापि श्रियं हरेत् ॥ ४५ ॥

ஆட்டின் கால்தூளியும், கழுதையின் கால்தூளியும், துடப்பத்தின் தூளியும், பெண்களின் கால்தூளியும் மேலேபடின் இந்திரனுக்கானாலும் ஐச்வரியம் தொலைந்துபோம் (45)

कृषितो नास्ति दुर्भिक्षं जपतो नास्ति पातकम् ।
मौनतः कलहो नास्ति नास्ति जागरतो भयम् ॥ ४६ ॥

பயிரிடுபவனுக்கு கருப்பில்லை, ஜபம் செய்பவனுக்குப் பாபமில்லை, மௌனமாயிருப்போனுக்குக் கலகமில்லை, தூங்காமலிருப்பவனுக்கு பயமில்லை. (46)

एकोऽपि गुणवान्पुत्रो निर्गुणैः किं शतैरपि ।
एकश्चन्द्रस्तमो हन्ति नक्षत्रैः किं प्रयोजनम् ॥ ४७ ॥

குணசாலியான குமாரன் ஒருவனே போதும். குணமில்லாத குமாரர்கள் நூறு பெயர்கள் இருந்தாலும் பலன் ஒன்றுமில்லை என்றபடி. இதற்கு நிதர்சனம் ஒரு சந்திரனில்லாமல் நக்ஷத்திரங்கள் எத்தனையிருந்தாலும் என்ன பிரயோஜனம். ஒன்றுமில்லை என்றபடி. (47)

प्रस्तावसदृशं वाक्यं स्वभावसदृशीं क्रियाम् ।
आत्मशक्तिसमं कोपं यो जानाति स पण्डितः ॥ ४८ ॥

பிரஸ்தாபத்திற்குத் தக்க வார்த்தையும், அவனவனுடைய ஸ்வபாவத்திற்குத் தக்க காரியமும், தன் சக்திக்குத் தக்க கோபமும், எவனறிவானோ அவனே பண்டிதனாவான். (48)

विवादशीलां स्वयमर्थचोरिणीं परानुकूलां परिहासभाषिणीम् ।
अग्राशिनीमन्यगृहप्रवेशिनीं त्यजन्ति भार्यां दशपुत्रमातरम् ॥ ४९

சண்டையிடும் குணமுள்ளவளும், தானாக வீட்டுச் சொத்தைத் திருடுபவளும், பிறருக்கனுகூலமானவளும், எப்பொழுதும் பரிஹாஸம் செய்பவளும், கணவனுக்கு

முன்னுண்பவளும் எப்பொழுதும் அண்டை அசல் வீட்டுக்குப் போகிறவளும் ஆகிய இப்படிப்பட்டவள் பத்துப் பெற்று அவற்றுக்குத் தாயாயிருந்தாலும் அவளை விட வேண்டும். (49)

कार्येषु दासी करणेषु मन्त्री
रूपेषु लक्ष्मीः क्षमया धरित्री ।
स्नेहे च माता शयने तु वेश्या
पट्कर्मयुक्ता कुलधर्मपत्नी ॥ ५० ॥

வீட்டு வேலையில் பணிப்பெண் போலவும், காரியாலோசனையில் மந்திரி போலவும், ரூபத்தில் மஹாலக்ஷ்மி போலவும், ஸ்நேகத்தில் தாய்போலவும், படுக்கையில் வேசிபோலவும் இவ்வாறுவகையாய் கணவன் விஷயத்தில் பிரவர்த்திப்பவள் குலஸ்த்ரீயாவாள். (50)

न विषं विषमित्याहुः ब्रह्मस्वं विषमुच्यते ।
विषमेकाकिनं हन्ति ब्रह्मस्वं पुत्रपौत्रकम् ॥ ५१ ॥

விஷம் விஷமல்ல. பிராமணருடைய சொத்தே விஷம். விஷத்தாலதைத் தின்பவனாகிய ஒருவனே சாவான். பிராமணருடைய சொத்தை அபகரித்தவனுடைய புத்ர பௌத்ராதிகளும் நாசமடைவார்கள். (51)

शतनिष्के धनाढ्यश्च शतग्रामेण भूपतिः ।
शताश्वः क्षत्रियो राजा शतश्लोकेन पण्डितः ॥ ५२ ॥

நூறு வராகனுள்ளவன் தநிகனெனப்பெறுவன். நூறு கிராமங்களுக்கு அதிபதியானவன் பூபதியெனப்பெறுவன். நூறு குதிரைகளுள்ளவன் ராஜனெனப் பெறுவன். நூறு சுலோகங்கள் அறிந்தவன் பண்டிதனாவான். (52)

शकटं पञ्चहस्तेषु दशहस्तेषु वाजिनम् ।
गजं हस्तसहस्रेण दुष्टं दूरेण वर्जयेत् ॥ ५३ ॥

வண்டிக்கு ஐந்து முழமும், குதிரைக்குப் பத்து முழமும், யானைக்கு ஆயிரமுழமும், துர்ஜனனுக்கு மிகவும் தூரமாயும் ஒதுங்கிப் போகவேண்டும். (53)

अनभ्यासे विषं शास्त्रं अजीर्णे भोजनं विषम् ।
दरिद्रस्य विषं गोष्ठी वृद्धस्य तरुणी विषम् ॥ ५४ ॥

அப்பியாச மில்லாதவனுக்கு சாஸ்திரம் விஷம். ஜீரணமில்லாதபோது போஜனம் விஷம். தரித்திரனுக்கு வினோத கோஷ்டி விஷம். கிழவனுக்கு இளம் பெண்சாதி விஷம். (54)

जिह्वाग्रे वर्तते लक्ष्मीर्जिह्वाग्रे मित्रबान्धवाः ।
जिह्वाग्रे बन्धनप्राप्तिर्जिह्वाग्रे मरणं ध्रुवम् ॥ ५५ ॥

நாக்கினாலேயே சம்பத்துண்டாகும். நாக்கினாலேயே ஸிநேகிதரும், பந்துக்களும் வருவார்கள். நாக்கினாலேயே விலங்கு நேரிடும். நாக்கினாலேயே சாவு நேரிடும். (55)

अदानदोषेण भवेद्दरिद्रो दारिद्र्यदोषेण करोति पापम् ।
पापादवश्यं नरकं प्रयाति पुनर्दरिद्रः पुनरेव पापी ॥ ५६ ॥

மனிதன் முப்பிறப்பில் ஒருவருக்கும் கொடாத தோஷத்தால் தரித்ரனாவான். அந்த தாரித்ரியத்தால் பாபம் செய்வான். அந்தபாபத்தால் நரகத்தை அடைவான். அந்த நரகத்தில் சிலநாளிருந்து திரும்பவும் தரித்திரனாய்ப் பிறந்து மறுபடியும் பாபத்தைச் செய்து இவ்வாறே துன்பப்படுவான். (56)

अतिथिर्बालकश्चैव स्त्रीजनो नृपतिस्तथा ।
एते वित्तं न जानन्ति जामाता चैव पञ्चमः ॥ ५७ ॥

அதிதியும், சிறுவனும், ஸ்த்ரீயும், ராஜாவும், மருமகனும் ஆகிய இவ்வைவரும் பணத்தின் இருப்பையும், இல்லாமையையு மறியார்கள். (57)

कुदेशं च कुमित्रं च कुराज्यं च कुबान्धवम् ।
कुभार्यां च कुराष्ट्रं च दूरतः परिवर्जयेत् ॥ ५८ ॥

அல்பதேசம், அல்பஸ்நேஹிதன், அல்பராஜ்யம், அல்பபந்து, அல்பஸ்த்ரீ, அல்பபட்டணம் இவற்றைத் தூரத்திலேயே விடவேண்டும். (58)

स्त्रीणां द्विगुण आहारो बुद्धिश्चापि चतुर्गुणा ।
साहसं षड्गुणं चैव कामोऽष्टगुण उच्यते ॥ ५९ ॥

ஸ்த்ரீகளுக்குப் புருஷனைக் காட்டிலும் ஆஹாரம் இரண்டுபங்கும், புத்தி நான்குபங்கும், ஸாஹஸம் ஆறுபங்கும், காமம் எட்டுபங்கும் அதிகமெனச் சொல்லப்படுகிறது. (59)

राजानं राष्ट्रजं पापं राजपापं पुरोहितम् ।
भर्तारं स्त्रीकृतं पापं शिष्यपापं गुरुं व्रजेत् ॥ ६० ॥

தன் தேசத்திலுள்ள ஜனங்கள் செய்யும் பாபம் ராஜாவையடையும், ராஜா செய்யும் பாபம் புரோஹிதனையடையும். பெண்டாட்டி செய்யும் பாபம் புருஷனையடையும். சிஷ்யன் செய்யும் பாபம் குருவையடையும். (60)

गीते वाद्ये तथा नृत्ते संग्रामे रिपुसङ्कटे ।
आहारे व्यवहारे च त्यक्तलज्जः सुखी भवेत् ॥ ६१ ॥

பாடும்போதும், வாத்யம் வாசிக்கும்போதும், நாட்யமாடும்போதும், சத்ருவுடன் போர்செய்யும்போதும், சாப்பிடும்போதும், வ்யவஹாரம் பேசும்போதும் வெட்கத்தை விட்டவனுக்கு சுகம் கிடைக்கும். (61)

रूपयौवनसंपन्ना विशालकुलसंभवाः ।
विद्याहीना न शोभन्ते निर्गन्धा इव किंशुकाः ॥ ६२ ॥

ரூபமும் வயசுமுள்ளவர்களாயினும், நற்குலத்திற் பிறந்தவர்களாயினும், வித்தையில்லாதார் ப்ரகாசியார். (எதுபோலவெனில்) கல்யாணமுருக்க மரங்கள் எவ்வளவு அழகிய பூவுள்ளதாயிருந்தும் வாசனையில்லாததினால் ப்ரகாசியாததுபோல. (62)

त्यजेदेकं कुलस्यार्थे ग्रामस्यार्थे कुलं त्यजेत् ।
ग्रामं जनपदस्यार्थे आत्मार्थे पृथिवीं त्यजेत् ॥ ६३ ॥

ஒரு குலத்திற்கு ஹானியுண்டாகும்பொழுது அதற்கு ஹேதுபூதனான ஒருவனை விட்டுவிடவேண்டும். ஒரு கிராம நிமித்தமாய் ஒரு குலத்தையும் விட்டுவிடலாம். ஒரு தேச நிமித்தமாய் ஒரு கிராமத்தையும் விட்டுவிடலாம். தனது நிமித்தமாய்த் தனக்குள்ள பூமியையும் விட்டுவிடலாம். (63)

कोकिलानां स्वरो रूपं पातिव्रत्यं तु योषिताम् ।
विद्या रूपं विरूपाणां क्षमा रूपं तपस्विनाम् ॥ ६४ ॥

குயில்களுக்குக் குரலும், ஸ்த்ரீகளுக்குக் கற்பும், குரூபிகளுக்கு வித்யையும், தபஸ்விகளுக்குப் பொறுமையும் அழகு. (64)

दैवाधीनं जगत्सर्वं मन्त्राधीनं तु दैवतम् ।
स मन्त्रो ब्राह्मणाधीनो ब्राह्मणो मम देवता ॥ ६५ ॥

உலகம் முழுவதும் தைவாதீநமாயிருக்கின்றது. அந்த தைவம் மந்த்ராதீநமாயிருக்கின்றது. அந்த மந்த்ரம் ப்ராம்ஹணாதீநமாயிருக்கின்றது. ஆகையால் ப்ராம்ஹணன் எனக்குத் தைவம் என்றார் ஸ்ரீகிருஷ்ண பகவான். (65)

पिबन्ति नद्यः स्वयमेव नाम्भः खादन्ति न स्वादुफलानि वृक्षाः ।
पयोधराः सस्यमदन्ति नैव परोपकाराय सतां विभूतयः ॥६६॥

நதிகள் தாமே தண்ணீரைக் குடியாது. வ்ருக்ஷங்கள் பலங்களைத் தாமே பக்ஷியாது. மேகங்கள் வர்ஷித்து விளைவித்த பயிரைத் தாமே பக்ஷியாது. அதுபோல லோகத்தில் ஸத்புருஷருடைய ஐச்வர்யங்கள் பரோபகாரத்தின் பொருட்டேயாம். (66)

पक्षिणां बलमाकाशं मत्स्यानामुदकं बलम् ।
दुर्बलस्य बलं राजा बालानां रोदनं बलम् ॥ ६७ ॥

பக்ஷிகளுக்கு ஆகாசம் பலம். மீன்களுக்கு ஜலம் பலம். பலஹீநனுக்கு ராஜா பலம். சிறுவர்களுக்கு அழுகை பலம். (67)

वृश्चिकस्य विषं पुच्छं मक्षिकाया विषं शिरः ।
तक्षकस्य विषं दंष्ट्रा सर्वाङ्गं दुर्जने विषम् ॥ ६८ ॥

தேளுக்குக் கொடுக்கில் விஷம். ஈக்குத் தலையில் விஷம். பாம்புக்குப் பல்லில் விஷம். துர்ஜநனுக்கு ஸர்வாங்கங்களிலும் விஷம். (68)

पुस्तकेषु च या विद्या परहस्ते च यद्धनम् ।
समये तु परिप्राप्ते न सा विद्या न तद्धनम् ॥ ६९ ॥

புஸ்தகத்துப் படிப்பும், பிறர்கைப் பொருளும் வேலைக்குதவா. ஆதலால் புஸ்தகத்தில் உள்ள படிப்பும் படிப்பல்ல. பிறர் கைப்பொருளும் பொருள் அல்ல. (69)

नश्यत्यनायकं कार्यं तथैव शिशुनायकम् ।
स्त्रीनायकं तथोन्मत्तनायकं बहुनायकम् ॥ ७० ॥

யஜமானனில்லாத கார்யமும், சிறுவரையும் ஸ்த்ரீகளையும், பயித்தியக்காரனையும், பல்பேர்களையும் நாயகனையுள்ள கார்யங்களும் கெடும். (70)

अभ्यासानुसरी विद्या बुद्धिः कर्मानुसारिणी ।
उद्योगानुगुणा लक्ष्मीः फलं भाग्यानुगं नृणाम् ॥ ७१ ॥

மனிதர்களின் வித்யை அப்யாஸத்துக்குத் தக்கதாயிருக்கும். புத்தி கர்மாநுகுணமாயிருக்கும். ஐச்வர்யம் முயற்சிக்குத் தக்கதாயிருக்கும். பலம் பாக்யத்துக்குத் தக்கதாயிருக்கும். (71)

वसन्तयौवना वृक्षाः पुरुषा धनयौवनाः ।
सौभाग्ययौवना नार्यो बुधा विद्यासुयौवनाः ॥ ७२ ॥

வ்ருக்ஷங்களுக்கு யௌவநம் வஸந்தருது. புருஷனுக்கு யௌவநம் தநம். ஸ்த்ரீகளுக்கு யௌவநம் ஸௌபாக்யம். பண்டிதனுக்கு யௌவநம் வித்யை. (72)

वृथा वृष्टिः समुद्रे च वृथा तृप्ते तु भोजनम् ।
वृथा धनपतौ दानं दारिद्र्ये यौवनं वृथा ॥ ७३ ॥

ஸமுத்ரத்தில் வர்ஷித்தலும், பசியில்லாதவனுக்குப் போஜநமிடுதலும், பணக்காரனுக்குத் தாநம் செய்தலும்,

தரித்ரனுடைய யௌவநமும் ஆகிய இவை ப்ரயோஜந மற்றன. (73)

अर्था गृहे निवर्तन्ते श्मशाने मित्रबान्धवाः ।
सुकृतं दुष्कृतं चैव गच्छन्तमनुगच्छति ॥ ७४ ॥

தர்மத்தைச் செய்யாமல் ஒளித்துவைத்த பணம், லோகாந்தரம் போகும்பொழுது க்ருஹத்தில் நின்றுவிடும். மித்ரபந்துக்கள் ச்மசாநத்தில் நின்றுவிடுவார்கள். புண்ய பாபங்களிரண்டுமே பின்தொடரும் (ஆகையால் தர்மம் செய்யவேண்டும்.) (74)

तस्करस्य वधो दण्डो दासीदण्डस्तु मुण्डनम् ।
भार्यादण्डः पृथक्छय्या मित्रदण्डस्त्वभाषणम् ॥ ७५ ॥

திருடனுக்குக் கொலையே தண்டனை. தாஸிக்குத் தலையை மொட்டையடித்தலே தண்டனை. பெண்டாட்டிக்குத் தனியாகப் படுப்பதே தண்டனை. ஸ்நேஹிதனுக்குப் பேசாதிருப்பதே தண்டனை. (75)

पिता च ऋणवान् शत्रुः माता च व्यभिचारिणी ।
भार्या रूपवती शत्रुः पुत्रः शत्रुरपण्डितः ॥ ७६ ॥

கடன்வைத்த தகப்பன் சத்ரு. வ்யபிசாரியான தாய் சத்ரு. அழகுள்ளபார்யை சத்ரு. வித்யாஹீநனான பிள்ளை சத்ரு. (76)

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
रक्षन्ति वार्धके पुत्राः न स्त्री स्वातन्त्र्यमर्हति ॥ ७७ ॥

ஸ்த்ரீகளைப் பால்யத்தில் தகப்பனும், யௌவநத்தில் கணவனும், வார்தக்யத்தில் பிள்ளைகளும் ரக்ஷிப்பார். ஆகையால் ஒருகாலத்திலும் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை. (77)

अग्निहोत्रं गृहं क्षेत्रं गर्भिणीं वृद्धबालकौ ।
रिक्तहस्तेन नोपेयात् राजानं दैवतं गुरुम् ॥ ७८ ॥

அக்நிஹோத்ரம் செய்கிறவிடம், க்ருஹம், புண்ய க்ஷேத்ரம், கர்ப்பவதி, கிழவர், குழந்தை, ராஜா, தைவம், குரு இவர்களிடத்துக்குப் போகும்பொழுது வெறுங்கையோடு போகலாகாது (எனவே அக்நிஹோத்ரத்திற்கு ஸமித்தும், மற்றவைகளுக்கு பலாதிகளும் கொண்டுபோக வேண்டுமென்பதாயிற்று). (78)

अहो प्रकृतिसादृश्यं श्लेष्मणो दुर्जनस्य च ।
मधुरैः कोपमायाति कटुकैरुपशाम्यति ॥ ७९ ॥

துர்ஜநனுக்கும் ச்லேஷ்மத்திற்கும் ஸ்வபாவம் ஸமானமாயிருக்கின்றது. ஆச்சர்யம். எப்படியென்றால் ச்லேஷ்மம் தித்திப்பால் வ்ருத்தியையும், காரத்தால் நாசத்தையும் எப்படி யடையுமோ, அப்படியே துஷ்டன் நல்வார்த்தையால் கோபத்தையும், கடுஞ்சொற்களால் தணிவையும் அடைவான். (79)

जनकश्चोपनेता च यश्च विद्यां प्रयच्छति ।
अन्नदाता भयत्राता पञ्चैते पितरः स्मृताः ॥ ८० ॥

தன்னைப்பெற்றவனும், உபநயநம் செய்வித்தவனும், படிப்பித்தவனும், அன்னமிட்டுக்காப்பாற்றினவனும், பயத்தினின்றும் காப்பாற்றியவனும் ஆகிய இவ்வைவரும் பிதாக்களாவார்கள். (80)

दरिद्राय कृतं दानं शून्यलिङ्गस्य पूजनम् ।
अनाथप्रेतसंस्कारं अश्वमेधसमं विदुः ॥ ८१ ॥

தரித்ரனுக்குக் கொடுக்கும் தாநமும், பூஜையில்லாத தேவதைக்குப் பூஜை செய்தலும், திக்கற்ற பிணத்தை

எடுத்துக்கொளுத்தலும் ஆகிய இம்மூன்றும் அச்வமேதத்திற்கு ஸமானமெனப் பெரியோர் கூறுகின்றனர். (81)

दातृत्वं प्रियवक्तृत्वं धीरत्वमुचितज्ञता ।
अभ्यासेन न लभ्यन्ते चत्वारः सहजा गुणाः ॥ ८२ ॥

ஈகையும், இன்பச்சொல்லும், தைர்யமும், நன்மை தீமைகளையறியும் தன்மையும் ஆகிய இந்நான்கு குணங்களும் தன்னுடன் பிறந்தாலன்றி, கற்றுக்கொண்டு வருவது அல்ல. (82)

अभुक्त्वाऽऽमलकं पथ्यं भुक्त्वा तु बदरीफलम् ।
कपित्थं सर्वदा पथ्यं कदली न कदाचन ॥ ८३ ॥

வெறும் வயிற்றில் நெல்லிக்காயும், போஜநாநந்தரம் இலந்தைப்பழமும், எப்பொழுதும் விளாம்பழமும் புசித்தால் சரீரத்திற்கு ஆரோக்யமுண்டாகும். வாழைப்பழம் ஒருபொழுதும் பத்யமாகாது. (83)

श्लोकार्धेन प्रवक्ष्यामि यदुक्तं ग्रन्थकोटिभिः ।
परोपकारः पुण्याय पापाय परपीडनम् ॥ ८४ ॥

அநேக க்ரந்தங்களால் சொல்லப்பட்ட விஷயத்தை நான் இந்த பாதி ஸ்லோகத்தினால் தெரிவிக்கின்றேன். (அதாவது) பிறருக்குபகாரம் செய்தல் புண்யத்தின் பொருட்டும், பிறரைப் பீடித்தல் பாபத்தின் பொருட்டுமாகின்றன. (84)

दुष्टा भार्या शठं मित्रं भृत्योऽहङ्कारसंयुतः ।
ससर्पे च गृहे वासो मृत्युरेव न संशयः ॥ ८५ ॥

துஷ்டையான பார்யையும், குடிலனான ஸ்நேஹிதனும், அஹங்காரமுள்ள வேலைக்காரனும், ஸர்ப்பமுள்ள வீட்டில் குடியிருப்பதும் நிஸ்ஸம்சயமாய் மரணாவஸ்தையையுண்டாக்கும். (85)

यस्मिन्देशे न संमानो न प्रीतिर्न च बान्धवाः ।
न विद्या नास्ति धनिको न तत्र दिवसं वसेत् ॥ ८६ ॥

எந்த தேசத்தில் ஸம்மாநமும், ப்ரீதியும், பந்துக்களும், வித்யையும், தநிகனும் இல்லையோ அவ்விடத்தில் ஒரு நாள்கூட வஸிக்கக்கூடாது. (86)

अग्निहोत्रफला वेदा दत्तभुक्तफलं धनम् ।
रतिपुत्रफला दाराः शीलवृत्तफलं श्रुतम् ॥ ८७ ॥

வேதாத்யயனம் செய்ததற்கு அக்நிஹோத்ரம் செய்தலும், தநமுண்மைக்குத் தாநபோகங்களும், பார்யையுண்மைக்கு ஸம்போக ஸந்தாநங்களும், சாஸ்த்ரங்களைக் கற்றதற்கு நல்ல ஆசாரம் நன்னடக்கை இவைகளுடனிருப்பதும் பலமாம். (87)

स्वगृहे पूज्यते मूर्खः स्वग्रामे पूज्यते प्रभुः ।
स्वदेशे पूज्यते राजा विद्वान्सर्वत्र पूज्यते ॥ ८८ ॥

மூர்க்கன் தன் வீட்டில் பூஜிக்கப்படுவான், ப்ரபு தன் க்ராமத்தில் பூஜிக்கப்படுவான், ராஜா தன் தேசத்தில் பூஜிக்கப்படுவான், வித்வான் எல்லாவிடத்திலும் பூஜிக்கப்படுவான்.

कुचेलिनं दन्तमलापहारिणं बह्वाशिनं निष्ठुरवाक्यभाषिणम् ।
सूर्योदये चास्तमये च शायिनं विमुञ्चति श्रीरपि चक्रपाणिनम् ॥

அழுக்காடையுடுப்பவனும், பல் தோண்டிக்கொண்டிருப்பவனும், பெருந்தீனி உண்பவனும், கடுஞ்சொற்களுள்ளவனும், காலை மாலை தூங்குகிறவனும், ஆகியவன் மற்றக் குணங்களால் விஷ்ணுவுக்குச்சமானனாகிலும், அவனைவிட்டு லக்ஷ்மிதேவி நீங்குவாள். (89)

दीर्घशृङ्गमनड्वाहं निर्लज्जां विधवां स्त्रियम् ।
शूद्रमक्षरसंयुक्तं दूरतः परिवर्जयेत् ॥ ९० ॥

நீண்ட கொம்புள்ள எருதையும், வெட்கமற்ற விதவையையும், படிப்புள்ள சூத்ரனையும் தூரத்திலேயே வர்ஜிக்க வேண்டும். (90)

मुखं पद्मदळाकारं वचश्चन्दनशीतळम् ।
हृत्कर्तरिसमं चातिविनयो धूर्तलक्षणम् ॥ ९१ ॥

தாமரை யிதழ்போல் முகப்பொலியும், சந்தனம்போல் குளிர்ந்த வார்த்தையும், கத்தரிக்கோல் போன்ற மனதும், அதிவிநயமும் ஆகிய இவை துர்ஜனனுடைய லக்ஷணங்களாம். (91)

मातृहीनशिशुजीवनं वृथा कान्तहीननवयौवनं वृथा ।
शान्तिहीनतपसः फलं वृथा तिन्त्रिणीरसविहीनभोजनम् ॥ ९२

தாயில்லாத குழந்தையும், கணவனில்லாத யௌவனமும், பொறுமையில்லாத தவமும், புளிரஸமில்லாத உணவும் வ்யர்த்தமாம். (92)

वस्त्रमुख्यस्त्वलङ्कारः प्रीतिमुख्यं तु भोजनम् ।
गुणमुख्या भवेन्नारी विद्यामुख्यस्तु भूसुरः ॥ ९३ ॥

அலங்காரத்திற்கு வஸ்த்ரமும், போஜனத்திற்கு ப்ரீதியும், ஸ்த்ரீகளுக்குக் குணமும், ப்ராம்ஹணனுக்கு வித்யையும் முக்யமாம். (93)

अमृतं सद्गुणा भार्या अमृतं बालभाषितम् ।
अमृतं राजसंमानस्त्वमृतं मानभोजनम् ॥ ९४ ॥

குணவதியான பெண்டும், குழந்தையின் மழலைச் சொல்லும், ராஜஸங்மானமும், மானமுள்ள போஜநமும் அம்ருதத்தோடொப்பாம். (94)

दुर्वृत्तो वा सुवृत्तो वा मूर्खः पण्डित एव वा ।
काषायदण्डमात्रेण यतिः पूज्यो न संशयः ॥ ९५ ॥

யதியானவன் துராசாரமுள்ளவனானாலும், ஸதாசாரமுள்ளவனானாலும், மூர்க்கனானாலும், பண்டிதனானாலும் காஷாய தண்டங்களைத் தரித்ததினாலேயே பூஜ்யனாவான். (95)

उपकारेण नीचानामपकारो हि जायते ।
पयःपानं भुजङ्गानां केवलं विषवर्धनम् ॥ ९६ ॥

பாம்புக்குப் பால்வார்ப்பதால் மிகுந்த விஷவ்ருத்தியே எப்படியுண்டாகுமோ, அப்படி நீசருக்குபகாரஞ் செய்யச் செய்ய அபகாரமே ஸம்பவிக்கும். (96)

ऋणं याच्ञा च वृद्धत्वं जारचोरदरिद्रता ।
रोगश्च भुक्तशेषश्चाप्यष्ट कष्टाः प्रकीर्तिताः ॥ ९७ ॥

கடன், யாசித்தல், மூப்பு, வ்யபிசாரம், திருட்டுத்தனம், தாழ்மை, பிணி, புக்தசேஷபோஜநம் இவைகளெட்டும் கஷ்டங்கள். (97)

दासी भृत्यः सुतो बन्धुर्वास्तु वाहनमेव च ।
धनधान्यसमृद्धिश्चाप्यष्ट भोगाः प्रकीर्तिताः ॥ ९८ ॥

தாஸீஜநம், ப்ருத்யர், பிள்ளை, சுற்றத்தார், வீடு, வாஹநம், தநம், தாந்யம் இவைகளெட்டும் போகங்கள்.

मक्षिका मारुतो वेश्या याचको मूषकस्तथा ।
ग्रामणीर्गणकश्चैव सप्तैते परबाधकाः ॥ ९९ ॥

ஈ, காற்று, வேசி, யாசகன், எலி, கிராமாதிகாரி, கணக்கன் இவ்வேழுபேரும் எப்பொழுதும் பிறரைப் பீடிப்பவர்கள். (99)

भूप्रदक्षिणषट्केन काशीयात्रायुतेन च ।
सेतुस्नानशतैर्यच्च तत्फलं मातृवन्दने ॥ १०० ॥

ஆறுதரம் பூமியை வலம்வருதலும், பதினாயிரந்தடவை காசியாத்திரை செய்தலும், அநேக சதாவ்ருத்தி ஸேதுஸ்நானம் செய்தலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் பலம் தாய்க்கு ப்ரீதிபூர்வகமாய் ஒருதடவை நமஸ்கரிப்பதாலேயே வரும். (100)

नान्नोदकसमं दानं न द्वादश्याः परं व्रतम् ।
न गायत्र्याः परो मन्त्रो न मातुर्दैवतं परम् ॥ १०१ ॥

அந்நோதக தானத்திற்கு ஸமானமான தானமும், த்வாதசீ வ்ரதத்தைக் காட்டிலும் உயர்ந்த வ்ரதமும், காயத்ரியைவிட ஶ்ரேஷ்டமான மந்த்ரமும், தாயைக்காட்டிலும் சிறந்த தைவமும் வேறில்லை. (101)

राजवत्पुत्रदाराश्च स्वामिवन्मित्रबान्धवाः ।
आचार्यवत्सभामध्ये भाग्यवन्तं स्तुवन्ति हि ॥ १०२ ॥

லோகத்தில் பணக்காரனை அவன் பெண்டுபிள்ளைகள் ராஜாவைப்போலவும், ஸ்நேஹிதரும், சுற்றத்தாரும், தேவனைப்போலவும், ஸபிகர் ஆசார்யனைப்போலவும் நினைத்து துதிப்பார்கள். (பணமுள்ளவனே பெரியவனென்றபடி) (102)

कपिलाक्षीरपानेन ब्राह्मणीसङ्गमेन च ।
वेदाक्षरविचारेण शूद्रश्चण्डालतां व्रजेत् ॥ १०३ ॥

சூத்ரன் காராம்பசுவின் பாலைக் குடிப்பதாலும், ப்ராம்ஹணஸ்த்ரீ ஸங்கமத்தாலும், வேதாக்ஷர விசாரத்தாலும் சண்டாளத்வத்தை யடைவான். (103)

लोकयात्रा भयं लज्जा दाक्षिण्यं धर्मशीलता ।
पञ्च यस्मिन्न विद्यन्ते न कुर्यात्तेन सङ्गमम् ॥ १०४ ॥

லோகவ்யவஹாரம், பயம், லஜ்ஜை, தாக்ஷிண்யம், தர்மஸ்வபாவம் ஆகிய இவ்வைந்து குணங்களுமில்லாத மனிதனோடு ஸஹவாசம் செய்யக்கூடாது. (104)

बालसखित्वमकारणहास्यं स्त्रीषु विवादमसज्जनसेवा ।
गर्दभयानमसंस्कृतवाणी षट्सु नरो लघुतामुपयाति ॥१०५॥

சிறுவர்களோடிணக்கமும், காரணமின்றி நகைத்தலும், பெண்களோடெதிர்க்கையும், துர்ஜனனிடத்து ஸேவையும், கழுதையின்மேலேறிச் செல்லுதலும், ஸம்ஸ்க்ருதபாஷை தெரியாதிருத்தலுமாகிய இவ்வாறினாலும் மனிதன் இழிவை யடைவான். (105)

विद्वानेव विजानाति विद्वज्जनपरिश्रमम् ।
न हि वन्ध्या विजानाति गुर्वीं प्रसववेदनाम् ॥ १०६ ॥

கற்றோருடைய பரிச்ரமத்தைக் கற்றவனே யறிவான் கொடியதான ப்ரஸவவேதனையை மலடியறியாள். (106)

विद्याश्चतस्रोऽसाध्याः स्युर्जन्मना सह संभवाः ।
गान्धर्वं च कवित्वं च शूरत्वं दानशीलता ॥ १०७ ॥

ஜனங்களுக்கு ஸங்கீதம், கவித்வம், ஶௌர்யம், தானசீலத்வம் இந்நான்கு வித்தைகளும் உடன் பிறக்கவேண்டியதேயன்றி, கற்றுக் கொள்ளத் தக்கவைகளல்ல. (107)

माता निन्दति नाभिनन्दति पिता भ्राता न संभाषते
भृत्यः कुप्यति नानुगच्छति सुतः कान्ता च नालिङ्गति ।
अर्थप्रार्थनशङ्कया न कुरुते स्वालापमात्रं सुहृत
तस्मादर्थमुपार्जयस्व सुमते ह्यर्थेन सर्वे वशाः ॥ १०८ ॥

பொருளில்லாதவனை தாய் நிந்திப்பாள். தகப்பன் ஸந்தோஷியான். உடன் பிறந்தவன் பேசான். வேலைக்காரன் கோபித்துக் கொள்ளுவான். மகன் பின் செல்லான். மனைவி தழுவாள். தன்னைப் பொருள் கேட்பனென்னும் அச்சத்தினால் ஸ்நேஹிதன் நல்லசொற் சொல்லமாட்டான். ஆகையால் ஓ புத்திசாலியே! பணத்தை ஸம்பாதி. பணத்தினால் எல்லோரும் ஸ்வாதீனராவார்கள். (108)

गोमूत्रमात्रेण पयो विनष्टं तक्रस्य गोमूत्रशतेन किं वा ।
अत्यल्पपापैर्विपदः शुचीनां पापात्मनां पापशतेन किं वा ॥१०९

கோமூத்ரம் கொஞ்சம் விழுந்தாலும் பால் கெட்டுப் போகும். அது எவ்வளவு கலந்தாலும் மோருக்குக் கெடுதியில்லை. அதுபோல் பரிசுத்தமான ஸத்புருஷர்களுக்கு அல்ப பாபத்தினாலும் விபத்து நேரும். பாபிகளுக்குப் பெரும் பாபம் பண்ணினாலும் கூச்சமுண்டாகாது. (109)

समुद्रमथने लेभे हरिर्लक्ष्मीं हरो विषम् ।
भाग्यं फलति सर्वत्र न विद्या न च पौरुषम् ॥ ११० ॥

கடலைக் கடைந்தபோது விஷ்ணு லக்ஷ்மியையடைந்தார். சிவன் விஷத்தையடைந்தார். ஆகையால் அவரவர் பாக்யத்துக்குத் தக்கதாய் பலன் கிடைக்குமேயன்றி வித்யையும், பௌருஷமும் காரணமல்ல. (110)

आतुरे नियमो नास्ति बाले वृद्धे तथैव च ।
सदाचाररते चैव ह्येषधर्मः सनातनः ॥ १११ ॥

ரோகிகளுக்கும், சிறுவர்களுக்கும், கிழவர்களுக்கும், ஸதாசாரலம்பன்னர்களுக்கும், வ்ரதநியமங்கள் வேண்டியதில்லை. (111)

एको देवः केशवो वा शिवो वा एको वासः पत्तने वा वनं वा ।
एकं मित्रं भूपतिर्वा यतिर्वा एका नारी सुन्दरी वा दरी वा ॥

விஷ்ணுவையாவது, சிவனையாவது தெய்வமென்று நம்பவேண்டும். பட்டணத்திலாயினும், வனத்திலாயினும் வாஸம் பண்ணவேண்டியது. இராஜனோடாயினும், ஸந்யாசியோடாயினும் ஸ்நேஹம் பண்ணவேண்டியது. அழகுள்ள மனைவியோடு கூடியாவது, குகையிலாவது வாஸம் செய்யவேண்டியது. (112)

अजायुद्धे मुनिश्राद्धे प्रभाते मेघडंबरे ।
दंपत्योः कलहे चैव बह्वारम्भो लघुक्रिया ॥ ११३ ॥

ஆட்டுக்கடாச் சண்டையிலும், ரிஷிச்ராத்தத்திலும், ப்ராதக்காலத்து மேகாடம்பரத்திலும், தம்பதிகளுடைய கலஹத்திலும் ஆரம்பம் அதிகமாயும், க்ரியை அல்பமாயுமிருக்கும். (113)

हतमश्रोत्रिये दानं हतं सैन्यमनायकम् ।
हता रूपवती वन्ध्या हतो यज्ञस्त्वदक्षिणः ॥ ११४ ॥

வேதமோதாதவனுக்குக் கொடுத்த தானமும், நாயகனில்லாத சேனையும், அழகியான மலடியும், தக்ஷிணையில்லாத யஜ்ஞமும் நிஷ்ப்ரயோஜனங்கள். (114)

क्रोधो वैवस्वतो राजा आशा वैतरणी नदी ।
विद्या कामदुघा धेनुः सन्तोषो नन्दनं वनम् ॥ ११५ ॥

கோபம் யமனோடொத்தது. ஆசை வைதரணி நதியையொத்தது. வித்யை காமதேனுவை யொத்தது. ஸந்தோஷம் நந்தனவனத்தை யொத்தது. (115)

असारे खलु संसारे सारं श्वशुरमन्दिरम् ।
हिमालये हरः शेते हरिः शेते महोदधौ ॥ ११६ ॥

ஸாரமில்லாத ஸம்ஸாரத்தில் ஶ்வசுரக்ருஹம் ஸாரம். ஆதலால்தான் ஶிவன் ஹிமவத்பர்வதத்திலும், விஷ்ணு ஸமுத்ரத்திலும் சயனித்திருக்கிறார்கள். (116)

चिता चिन्ता द्वयोर्मध्ये चिन्ता नाम गरीयसी ।
चिता दहति निर्जीवं चिन्ता प्राणयुतं वपुः ॥ ११७ ॥

சிதை, சிந்தை என்னுமிரண்டுகளுள் சிதையைக்காட்டிலும் சிந்தை யதிகமானது. (எப்படியெனில்) சிதை ப்ராணன் போன ஶரீரத்தைத் தஹிக்கின்றது. சிந்தையோ ப்ராணனோடு கூடின ஶரீரத்தையே தஹிக்கின்றது. (117)

आजगाम यथा लक्ष्मीर्नारिकेलफलाम्बुवत् ।
निर्जगाम तथा लक्ष्मीर्गजभुक्तकपित्थवत् ॥ ११८ ॥

செல்வம் வரும்பொழுது தேங்காய்க்குள் இளநீர் போலத் தானேவரும். அது போகும்பொழுது யானையுண்ட விளாங்கனிபோற் போகும் (118)

नेक्षेतोद्यन्तमादित्यं नास्तं यन्तं कदाचन ।
नोपसृष्टं न वारिस्थं न मध्यं नभसो गतम् ॥ ११९ ॥

ஸூர்யன் உதிக்கும்பொழுதும், அஸ்தமிக்கும்பொழுதும், க்ரஹணம் பிடித்தபொழுதும், நடுவானத்திலிருக்கும்பொழுதும், ஜலத்தில் ஸூர்ய ப்ரதிபிம்பத்தையும் பார்க்கலாகாது. (119)

न लङ्घयेद्वत्सतन्त्रीं न प्रधावेच्च वर्षति ।
न चोदके निरीक्षेत स्वं रूपमिति धारणा ॥ १२० ॥

கன்றின் கயிற்றைத் தாண்டலாகாது. மழையிலோடலாகாது. நீரில் தன்னிழலைப் பார்க்கலாகாது என்பது சாஸ்த்ர மரியாதை. (120)

नाश्नीयाद्भार्यया सार्धं नैनामीक्षेत चाश्नतीम् ।
क्षुभन्तीं जृम्भमाणां वा न चासीनां यथासुखम् ॥ १२१ ॥
नाञ्जयन्तीं स्वके नेत्रे न चाभ्यक्तामनावृताम् ।
न पश्येत्प्रसवन्तीं च तेजस्कामो द्विजोत्तमः ॥ १२२ ॥

மனைவியோடுகூடப் புஜிக்கலாகாது. மனைவி சாப்பிடும்பொழுதும், தும்மும்பொழுதும், கொட்டாவி விடும்பொழுதும், யதாஸுகமாய் உட்கார்ந்திருக்கும்பொழுதும், கண்ணுக்கு மை தீட்டிக்கொள்ளும்பொழுதும், எண்ணெயிட்டுக்கொண்டு ஸ்நாநஞ்செய்யும்பொழுதும், வஸ்த்ரஹீனையாயிருக்கும்பொழுதும், ப்ரஸவிக்கும்பொழுதும் தேஜஸ்காமனான த்விஜன் அவளைப்பார்க்கலாகாது. (121, 122)

नान्नमद्यादेकवासा न नग्नः स्नानमाचरेत् ।
नाश्लीलं कीर्तयेद्धीमान्न कुर्यात्स्त्रीवचः क्वचित् ॥ १२३ ॥

ஜ்ஞானமுள்ள ப்ராம்ஹணன் ஒற்றைத் துணியுடுத்தி உண்ணலாகாது. திகம்பரனாய் ஸ்நாநம் செய்யலாகாது.

அமங்கள வார்த்தையைச் சொல்லலாகாது. ஸ்த்ரீயின் சொற்படி எப்போதும் செய்யக்கூடாது. (123)

न मूत्रं पथि कुर्वीत न भस्मनि न गोव्रजे ।
न फालकृष्टे न जले न चित्यां न न पर्वते ।
न जीर्णदेवायतने न वल्मीके कदाचन ॥ १२४ ॥

न ससत्वेषु गर्तेषु न गच्छन्नापि च स्थितः ।
न नद्यां न नदीतीरे न वनस्पत्यधस्तथा ॥ १२५ ॥

वाय्वग्निविप्रानादित्यमपः पश्यंस्तथैव गाः ।
न कदाचन कुर्वीत विण्मूत्रस्य विसर्जनम् ॥ १२६ ॥

வழியிலும், சாம்பலிலும், பசுமாட்டு மந்தையிலும், உழுத நிலத்திலும், நீரிலும், சிதையிலும், மலையின்மீதும், இடிந்துபோன தேவாலயத்திலும், புற்றிலும், ஜந்துக்களுள்ள வளைகளிலும், நடந்துகொண்டும், நின்றுகொண்டும், ஆற்றிலும், ஆற்றங்கரையிலும், மரத்தினடியிலும் ஜலமலங்களை விடலாகாது. மேலும் வாயு, அக்நி, ப்ராம்ஹணன், ஸூர்யன், ஜலம், பசுக்கள் இவைகளைப் பார்த்துக்கொண்டும் விண்மூத்ராதிகளை விடலாகாது. (124, 125, 126)

विण्मूत्रोत्सर्जनं विप्रो दिवा कुर्यादुदङ्मुखः ।
दक्षिणाभिमुखो रात्रौ सन्ध्ययोश्च यथा दिवा ॥ १२७ ॥

छायामन्धकारे वा रात्रावहनि वा द्विजः ।
यथासुखमुखः कुर्यात्प्राणबाधाभयेषु च ॥ १२८ ॥

ப்ராம்ஹணன் பகற்காலத்திலும், அந்திநேரத்திலும், வடக்கு முகமாயும், இரவில் தெற்கு முகமாயும் உட்கார்ந்து ஜலமலங்களை விஸர்ஜிக்க வேண்டும், நிழலிலும், இருட்டிலும், ப்ராணபாதை பயத்திலும், இரவு பகல் எப்பொழுதாயினும், எந்தமுகமாயிருந்தும் மலமூத்ரங்களை விடலாம். (127, 128)

नाग्निं मुखेन च धमेन्नग्नां नेक्षेत च स्त्रियम् ।
नामेध्यं प्रक्षिपेदग्नौ न च पादौ प्रतापयेत् ॥ १२९ ॥

நெருப்பை வாயால் ஊதலாகாது. வஸ்த்ரமில்லாமலிருக்கும் பெண்டீரைப் பார்க்கலாகாது. அபரிசுத்தமான வஸ்துவை அக்நியிற் போடலாகாது. நெருப்பிற் காலைக் காய்ச்சலாகாது. (129)

नैकः स्वप्याच्छून्यगेहे शयानं न प्रबोधयेत् ।
नोदक्ययाऽभिभाषेतं यज्ञं गच्छेन्नचावृतः ॥ १३० ॥

பாழ்வீட்டில் ஒருவனாய்த் தூங்கலாகாது. தூங்குகிறவனை எழுப்பலாகாது. மாதவிடாயான பெண்ணுடன் பேசலாகாது. வரிக்கப்பட்டாலன்றித் தநாசையால் யஜ்ஞத்திற்குப் போகலாகாது. (130)

नाधार्मिके वसेद्ग्रामे न व्याधिबहुले भृशम् ।
नैकः प्रपद्येताध्वानं न चिरं पर्वते वसेत् ॥ १३१ ॥

தார்மிகனில்லாதவூரிலும், வ்யாதிமிகுந்துள்ளவூரிலும் இருக்கலாகாது. ஒருவனாய் நெடுவழி போகலாகாது. மலைமேல் பல நாள் வாஸஞ்செய்யலாகாது. (131)

उपानहौ च वासश्च धृतमन्यैर्न धारयेत् ।
उपवीतं च शयनं जायापत्ये कमण्डलुम् ॥ १३२ ॥

அன்யன் உபயோகித்த பாதரக்ஷை, வஸ்த்ரம், யஜ்ஞோபவீதம், படுக்கை, ஸ்த்ரீ, புத்ரன், பான பாத்திரம் இவைகளை வேறொருவன் உபயோகித்துக்கொள்ளலாகாது.

नाविनीतैर्व्रजेद्वाहैर्न च क्षुद्व्याधिपीडितैः ।
न भिन्नशृङ्गाक्षिखुरैर्न वालधिविरूपितैः ॥ १३३ ॥

विनीतैस्तु व्रजेन्नित्यमाशुगैर्लक्षणान्वितैः ।
वररूपोपसंपन्नैः प्रतोदेनातुदन्भृशम् ॥ १३४ ॥

பழக்கப்படாதவைகளாயும், பசி, வ்யாதிகளால் பீடிதங்களாயும், கொம்பு, கண், குளம்பு குறைவுகளுள்ளவைகளுமான எருதுகள், குதிரைகள் முதலியவைகளிலும், இவைகளைக்கட்டின வண்டி முதலியவற்றிலும் ஏறிப்போகலாகாது. இதல்லாமல் நன்றாய்ச் சிக்ஷிதங்களும், வேகமுள்ளவைகளும், ஸுலக்ஷணயுக்தங்களுமான வாஹநங்களில் ஏறி, அவற்றை மிகவும் வருத்தாமற் செல்லவேண்டும். (133,134)

बालातपः प्रेतधूमो वर्ज्यं भिन्नं तथाऽऽसनम् ।
न छिन्द्यान्नखलोमानि दन्तैर्नोत्पाटयेन्नखान् ॥ १३५ ॥

இளம் வெய்யிலும், பிணப்புகையும், உடைந்த ஆஸனமும், வர்ஜிக்கத் தக்கவை. நகங்களையும், ரோமங்களையும் கிள்ளலாகாது. பற்களால் நகங்களை கிழிக்கலாகாது. (135)

लोष्टमर्दी तृणच्छेदी नखखादी च यो नरः ।
स विनाशं व्रजत्याशु सूचकोऽशुचिरेव च ॥ १३६ ॥

காரணமில்லாமல் மண்ணாங்கட்டியைப் பொடிப்பவனும், துரும்பைக் கிள்ளுபவனும், நகத்தைக்கடிப்பவனும்,

கோட்சொல்லுபவனும், அபரிசுத்தனானவனும் ஆகிய இவர்கள் விநாசத்தையடைவார்கள். (136)

न निगर्ह्यकथां कुर्याद्बहिर्माल्यं न धारयेत् ।
गवां च यानं पृष्ठेन सर्वथैव विवर्जयेत् ॥ १३७ ॥

கெட்ட கதைகளைச் சொல்லலாகாது. வெளியில் தெரியும்படி பூ வைத்துக் கொள்ளலாகாது. எக்காரணத்தாலும் எருதின் முதுகிலேறிப் போகக்கூடாது. (137)

अद्वारेण न चात्मीयं ग्रामं वा वेश्म वा विशेत् ।
रात्रौ च वृक्षमूलानि दूरतः परिवर्जयेत् ॥ १३८ ॥

தன் கிராமத்துக்காவது, வீட்டிற்காவது வழிவிட்டுத் தப்புவழியாய் போகலாகாது. ராத்ரியில் மரத்தடியில் போகலாகாது. (138)

न स्नानमाचरेद्भुक्त्वा नातुरो न महानिशि ।
न वासोभिः सहाजस्रं नाविज्ञाते जलाशये ॥ १३९ ॥

போஜனம் செய்த பிற்பாடும், பிணியாளனாயிருக்கும் பொழுதும், பாதிராத்ரியிலும், எப்பொழுதும் வஸ்த்ரங்களோடும், தானறியாத மடுவிலும், ஸ்நானம் செய்யக்கூடாது. (139)

वैरिणं नोपसेवेत सहायं चैव वैरिणः ।
अधार्मिकं तस्करं च परस्यैव च योषितम् ॥ १४० ॥

சத்ருவையும், அவன் ஸ்நேஹிதனையும், தர்மஹீனனையும், திருடனையும், பரஸ்த்ரீயையும் சேரலாகாது. (140)

क्षत्रियं चैव सर्पं च ब्राह्मणं च बहुश्रुतम् ।
नावमन्येत वै भूष्णुः कृशानपि कदाचन ॥ १४१ ॥

தான் அபிவிருத்தியடையக் கருத்துள்ளவன் க்ஷத்ரியனையும், பாம்பையும், கற்றறிந்த ப்ராம்ஹணனையும், அவர்கள் இளைத்திருந்தபோதிலும் அவமதிக்கலாகாது. (141)

सत्यं ब्रूयात् प्रियं ब्रूयात् न ब्रूयात्सत्यमप्रियम् ।
प्रियं च नानृतं ब्रूयादेष धर्मः सनातनः ॥
भद्रं भद्रमिति ब्रूयाद्भद्रमित्येव वा वदेत् ॥ १४२ ॥

ஸத்யமாயும் ப்ரியமாயுமுள்ளதைச் சொல்லவேண்டும். ஸத்யமானதானாலும், அப்ரியத்தைச் சொல்லலாகாது. ப்ரியமானதானாலும் அஸத்யத்தைச் சொல்லலாகாது. பத்ரமாவது சுபமாகையால் ஒருவனுக்கு ப்ரியம் சொல்லும்போது பத்ரம் பத்ரம் என்று சொல்லவேண்டும். (142)

शुष्कवैरं विवादं च न कुर्यात्केनचित्सह ।
परिहासेऽप्यनौचित्यं स्वप्नेऽप्यन्यवधूरतिम् ॥ १४३ ॥

யாரோடும் நிஷ்ப்ரயோஜனமான விரோதத்தையும், விவாதத்தையும், பரிஹாஸத்தில்கூட ஸமயோசிதமில்லாத ஸம்பாஷணத்தையும், ஸ்வப்நத்தில்கூட அன்யஸ்த்ரீகமனத்தையும் செய்யலாகாது. (143)

हीनाङ्गानतिरिक्ताङ्गान् विद्याहीनान्वयोधिकान् ।
रूपद्रव्यविहीनांश्च जातिहीनांश्च न क्षिपेत् ॥ १४४ ॥

அங்கம் குறைந்தவர்களையும், அங்கம் அதிகமாயுள்ளவர்களையும், வித்யையில்லாதவர்களையும், வயதில் மூத்தவர்

களையும், ஸௌந்தர்யம், த்ரவ்யம், ஜாதி இவைகளால் குறைந்தவர்களையும் அவமதிக்கலாகாது. (144)

श्रद्दधानः शुभां विद्यामाददीतावरादपि ।
अन्त्यादपि परं धर्मं स्त्रीरत्नं दुष्कुलादपि ॥ १४५ ॥

ச்ரத்தையுள்ளவன் நல்ல வித்யையை ஜாத்யாதிஹீநனிடத்திலும் க்ரஹிக்கலாம். மோக்ஷதர்மத்தைச் சண்டாளனிடத்திலிருந்தும் க்ரஹிக்கலாம். ஸத்குணவதியான பெண்ணைத் துஷ்டகுலத்திலிருந்தும் க்ரஹிக்கலாம். (145)

विषादप्यमृतं ग्राह्यं बालादपि सुभाषितम् ।
अमित्रादपि सद्वृत्तममेध्यादपि काञ्चनम् ॥ १४६ ॥

விஷத்தினின்றாயினும் அம்ருதத்தை க்ரஹிக்கலாம். சிறுவனிடத்தினின்றாயினும் நல்வார்த்தையை க்ரஹிக்கலாம். சத்ருவினிடத்தினின்றாயினும் நல்ல நடத்தையை க்ரஹிக்கலாம். அமேத்யத்திலிருந்தாயினும் தங்கத்தை க்ரஹிக்கலாம். (146)

स्त्रियो रत्नान्यथो विद्या धर्मः शौचं सुभाषितम् ।
विविधानि च शिल्पानि समादेयानि सर्वतः ॥ १४७ ॥

நற்குணமுள்ள பெண்கள், ரத்நங்கள், வித்யை, தர்மம், பரிசுத்தி, ஸத்வாக்யம், நாநாவிதமான சில்பங்கள் இவைகளை எங்கிருந்தாயினும் க்ரஹிக்கலாம். (147)

हीनजातिस्त्रियं मोहादुद्वहन्तो द्विजातयः ।
कुलान्येव नयन्त्याशु ससन्तानानि शूद्रताम् ॥ १४८ ॥

ப்ராம்ஹணர்கள் சூத்ரஜாதி ஸ்த்ரீயை மோஹத்தால் பரிக்ரஹித்தால் தங்களுக்குண்டாகும் ஸந்தானத்தோடு தங்கள் குலங்களையும் சூத்ரத்வத்தை அடையவைப்பார். (148)

यद्यत्परवशं कर्म तत्तद्यत्नेन वर्जयेत् ।
यद्यदात्मवशं तु स्यात्तत्तत्सेवेत यत्नतः ॥ १४९ ॥

सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं सुखम् ।
एतद्विद्यात्समासेन लक्षणं सुखदुःखयोः ॥ १५० ॥

பராதீநமான கார்யத்தை யத்னத்துடன் விட்டு ஸ்வாதீநமானகாரியத்தை யத்னத்துடன் செய்யவேண்டும். ஏனென்றால் பராதீநமானவைகளெல்லாம் துக்ககரங்கள். ஸ்வாதீநமானவைகளெல்லாம் ஸுககரங்கள். இது ஸுகதுக்கங்களுக்குச் சுருக்கமான லக்ஷணம். (149,150)

अद्रोहेण च भूतानामल्पद्रोहेण वा पुनः ।
या वृत्तिस्तां समास्थाय विप्रो जीवेदनापदि ॥ १५१ ॥

ப்ராம்ஹணன் ஆபத்தில்லாத காலத்தில் ஸகல பூதங்களுக்கும் பாதையுண்டாக்கக்கூடாத வ்ருத்தியாலாவது, ஸ்வல்பபாதையை உண்டாக்கும் வ்ருத்தியினாலாவது ஜீவிக்கலாம். (151)

ऋतामृताभ्यां जीवेत मृतेन प्रमृतेन वा ।
सत्यानृतेन वा विद्वान्न श्ववृत्या कदाचन ॥ १५२॥

ऋतमुञ्छशिलं प्रोक्तममृतं स्यादयाचितम् ।
मृतं तु याचितं भैक्षं प्रमृतं कर्षणं स्मृतम् ॥ १५३ ॥

सत्यानृतं तु वाणिज्यं तेन चैवापि जीव्यते ।
सेवा श्ववृत्तिराख्याता तस्मात् तां परिवर्जयेत् ॥ १५४ ॥

வயல்களில் சிந்தின தான்யங்களைப் பொறுக்குதல் உஞ்சம். கதிர் முதலியவைகளைப் பொறுக்குதல் சிலம். இவை ருதம் எனப்படும். அம்ருதமென்றால் யாசியாமல் கிடைத்த த்ரவ்யம். ம்ருதமாவது யாசித்தால் கிடைக்கும் த்ரவ்யம். ப்ரம்ருதமாவது பயிர்செய்தல். ஸத்யாந்ருதமாவது வர்த்தகஞ்செய்தல். ஶ்வவ்ருத்தியாவது ஸேவைசெய்தல். இவைகளில் ப்ராம்ஹணனுக்குப் பின்சொன்ன வ்ருத்தியைக் காட்டிலும் முன்சொன்னவைகளால் வ்ருத்தியே ஶ்ரேஷ்டமானது. உஞ்சவ்ருத்திமுதல் வாணிஜ்யம்வரை சொல்லப்பட்ட வ்ருத்திகளினால் ஜீவிக்கலாமேயன்றி, ப்ராம்ஹணன் ஶ்வவ்ருத்தியால் ஜீவிக்கலாகாது. (152-154)

विप्राणां ज्ञानतो ज्यैष्ठ्यं क्षत्रियाणां तु वीर्यतः ।
वैश्यानां धान्यधनतः शूद्राणामेव जन्मतः ॥ १५५ ॥

ப்ராம்ஹணரில் ஜ்ஞானமுள்ளவன் பெரியவன். க்ஷத்ரியரில் பராக்ரமமுள்ளவன் பெரியவன். வைச்யரில் தனதான்யங்களுள்ளவன் பெரியவன். சூத்ரரில் வயோதிகன் பெரியவன். (155)

वित्तं बन्धुर्वयः कर्म विद्या भवति पञ्चमी ।
एतानि मान्यस्थानानि गरीयो यद्यदुत्तरम् ॥ १५६ ॥

தனம், பந்துத்வம், வயஸ்ஸு, க்ரியை, வித்யை இவ்வைந்தும் மரியாதைக்குக் காரணமானவைகள். இவற்றுள் முன் சொல்லப்பட்டவற்றைக் காட்டிலும், பின் சொல்லப்

பட்டவைகள் ஒன்றைக்காட்டிலுமொன்று ஶ்ரேஷ்டமானவை. (156)

विद्या नाम नरस्य रूपमधिकं प्रच्छन्नगुप्तं धनं
विद्या भोगकरी यशः सुखकरी विद्या गुरूणां गुरुः ।
विद्या बन्धुजनो विदेशगमने विद्या परा देवता
विद्या राजसु पूज्यते न हि धनं विद्याविहीनः पशुः ॥१५७॥

மனிதனுக்கு வித்யை ஶ்ரேஷ்டமான ரூபமாகும்; ரஹஸ்யமாயடக்கம் பண்ணின தனமாகும்; போகம், கீர்த்தி, ஸுகம் இவைகளை உண்டாக்கும்; குருக்களுக்கும் குருவாகும்; தேஶாந்தரகமனத்தில் பந்துவைப்போல் ரக்ஷிக்கத்தக்கது; உத்தமமான தைவம்போல் அபீஷ்டஸித்தியை உண்டாக்கத்தக்கது; ராஜசபையில் பெருமையைப்பெறும். தனமப்படியல்ல. ஆகையால் இப்படிப்பட்ட வித்யையில்லாதவன் பஶுவோடொப்பானவன். (157)

क्षान्तिश्चेत्कवचेन किं किमरिभिः क्रोधोऽस्ति चेद्देहिनां
ज्ञातिश्चेदनलेन किं यदि सुहृद्दिव्यौषधैः किं फलम् ।
किं सर्पैर्यदि दुर्जनाः किमु धनैर्विद्याऽनवद्या यदि
व्रीडा चेत्किमु भूषणैः सुकविता यद्यस्ति राज्येन किम् ॥

பொறுமையுள்ளவனுக்குக் கவசம் ஏன்? க்ரோதமுள்ளவனுக்கு ஶத்ரு ஏன்? ஜ்ஞாதியுள்ளவனுக்கு நெருப்பு ஏன்? ஸ்நேஹிதனுள்ளவனுக்கு ஔஷதம் ஏன்? துர்ஜனர் நேஶமுள்ளோர்க்குப் பாம்பு ஏன்? படிப்பாளிக்குப் பணம் ஏன்? லஜ்ஜையுள்ளோர்க்குப் பூஷணம் ஏன்? ஸுகவித்வமுள்ளோர்க்கு ராஜ்யம் ஏன்? (158)

दाक्षिण्यं स्वजने दया परिजने शाठ्यं सदा दुर्जने
प्रीतिः साधुजने नयो नृपजने विद्वज्जने चार्जवम् ।
शौर्यं शत्रुजने क्षमा गुरुजने कान्ताजने धृष्टता
ये चैवं पुरुषाः कलासु कुशलास्तेष्वेव लोकस्थितिः ॥ १५९

பந்து ஜனங்களிடத்தில் தாக்ஷிண்யமும், பணிசெய்பவர்களிடத்தில் தயையும், துர்ஜநரிடத்தில் கபடமும், ஸாதுக்களிடத்தில் ப்ரீதியும், அரசரிடத்தில் நீதியும், வித்வான்களிடத்தில் நிஷ்கபடமும், ஶத்ருக்களிடத்தில் ஶௌர்யமும், குருக்களிடத்தில் பொறுமையும், பெண்களிடத்தில் தைரியமும் உடையவராய் ப்ரவர்த்திக்கும் வித்யாப்ராவீண்யமுள்ள புருஷரிடத்தில்தான் லோகமரியாதை நிற்கும்.

जाड्यं धियो हरति सिञ्चति वाचि सत्यं
मानोन्नतिं दिशति पापमपाकरोति ।
चेतः प्रसादयति दिक्षु तनोति कीर्तिं
सत्सङ्गतिः कथय किं न करोति पुंसाम् ॥ १६० ॥

ஸத்ஸங்கம் புத்திஜாட்யத்தைப் போக்கும். வாக்கிலுண்மையையுண்டாக்கும். கௌரவத்தைத் தரும். பாபத்தைப் போக்கும். மனஸ்ஸை ஸ்வச்சமாக்கும். கீர்த்தியைத் திக்குகளில் பரவச்செய்யும். இன்னும் எதைத்தான் செய்யாது? எல்லாவற்றையும் செய்யுமென்றபடி. (160)

दौर्मन्त्र्यान्नृपतिर्विनश्यति यतिः सङ्गात्सुतो लालना-
द्विप्रोऽनध्ययनात्कुलं कुतनयाच्छीलं खलोपासनात् ।
ह्रीर्मद्यादनवेक्षणादपि कृषिः स्नेहः प्रवासाश्रया-
न्मैत्री चाप्रणयात्समृद्धिरनयात्त्यागात्प्रमादाद्धनम् ॥१६१॥

துர்மந்த்ரியால் ராஜாவும், ஸங்கத்தால் ஸந்யாஸியும், லாலனையால் புத்ரனும், வேதமோதாமையால் ப்ராம்ஹணனும், துஷ்ட புத்ரனால் குலமும், துஷ்ட ஸங்கத்தால் நல்லொழுக்கமும், கள்ளுண்டலால் மானமும், பாராமையால் பயிரும், பரதேஶகமனத்தால் ஸ்நேஹமும், விஶ்வாஸமில்லாமையால் மைத்ரமும், நீதியில்லாமையால் ஸம்ருத்தியும், மிகவும் கொடுத்தல், கவனமின்மை இவ்விரண்டினால் தனமும் நஶிக்கும். (161)

दानं भोगो नाशस्तिस्रो गतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुङ्क्ते तस्य तृतीया गतिर्भवति ॥ १६२॥

தனத்துக்கு, தானம், அநுபவம், நாஶம் என்று இம்மூவகையான கதிகளுண்டு. எந்த மனிதன் ஒருவருக்கும் கொடுக்காமலும், தானநுபவியாமலுமிருக்கிறானோ அவனுடைய தனம் நாஶமடையும். (162)

यस्यास्ति वित्तं स नरः कुलीनः स पण्डितः सः श्रुतवान्विधिज्ञः ।
स एव वक्ता स च दर्शनीयः सर्वे गुणाः काञ्चनमाश्रयन्ते ॥१६३।

தனமுள்ளவனே குலீநன். அவனே பண்டிதன். அவனே ஶாஸ்த்ரஜ்ஞன். அவனே கர்தவ்யாம்சங்களையறிந்தவன். அவனே பேசத்தெரிந்தவன். அவனே பார்க்கத்தக்கவன். ஸகல குணங்களும் தனத்தையே ஆஶ்ரயித்துக் கொண்டிருக்கின்றன. (163)

दुर्जनः परिहर्तव्यो विद्ययाऽलंकृतोऽपि सन् ।
मणिना भूषितः सर्पः किमसौ न भयङ्करः ॥ १६४ ॥

ரத்னத்தால் பூஷிக்கப்பட்டதாயினும் ஸர்ப்பம் எப்படிப் பயங்கரமானதோ, அப்படியே துர்ஜநன் வித்யாபூஷிதனானாலும் வர்ஜிக்கத்தக்கவன். (164)

जाड्यं ह्रीमति गण्यते व्रतरते दम्भः शुचौ कैतवं
शूरे निर्घृणता मुनौ विमतिता दैन्यं प्रियालापिनि ।
तेजस्विन्यवलिप्तता मुखरता वक्तर्यशक्तिः स्थिरे
तत्को नाम गुणो भवेत्सुगुणिनां यो दुर्जनैर्नाङ्कितः १६५

துர்ஜநன், ஸஜ்ஜனரிடத்துள்ள ஸத்குணங்களையும் துர்க்குணங்களாக நினைப்பான். எப்படியெனில், லஜ்ஜையுள்ளவனைப்பார்த்து ஜடனென்பான்; வ்ரதசீலனை டாம்பிகனென்பான்; ஆசாரமுள்ளவனைக் கபடியென்பான்; சூரனை தயையில்லாதவனென்பான்; முநீஶ்வரனை மதியில்லாதவனென்பான்; ப்ரியவாதியைத் தீனனென்பான்; தேஜஸுள்ளவனைக் கர்வியென்பான்; பேசும் திரமுள்ளவனை வாயாடியென்பான்; ஸ்திரனானவனை அஶக்தனென்பான். ஆகையால் துர்ஜனரால் தூஷிக்கப்படாத குணம் ஸஜ்ஜனரிடத்தில் எதுதானுள்ளது? (165)

लोभश्चेदगुणेन किं पिशुनता यद्यस्ति किं पातकैः
सत्यं चेत्तपसा च किं शुचिमनो यद्यस्ति तीर्थेन किम् ।
सौजन्यं यदि किं बलेन महिमा यद्यस्ति किं मण्डनैः
सद्विद्या यदि किं धनैरपयशो यद्यस्ति किं मृत्युना ॥१६६॥

அதிக ஆசையுண்டாயிருந்தால் வேறு துர்க்குணம் வேண்டியதில்லை. கோட்சொல்லுதலுண்டாயிருந்தால் வேறு பாபம் வேண்டியதில்லை. ஸத்யமுண்டாயிருந்தால்

வேறு தபஸ்ஸு வேண்டியதில்லை. நல்ல மனமுண்டாயிருந்தால் வேறு தீர்த்தயாத்ரை வேண்டியதில்லை. ஸௌஜன்யமுண்டாயிருந்தால் வேறு பலம் வேண்டியதில்லை. மகிமையிருந்தால் வேறு ஆபரணங்கள் வேண்டியதில்லை. நிறைந்த கல்வியுண்டாயிருந்தால் வேறு பொருள் வேண்டியதில்லை. அபகீர்த்தி யுண்டாயிருந்தால் வேறு ம்ருத்யு வேண்டியதில்லை. (166)

एते सत्पुरुषाः परार्थघटकाः स्वार्थान्परित्यज्य ये
सामान्यास्तु परार्थमुद्यमभृतः स्वार्थाविरोधेन ये ।
तेऽमी मानुषराक्षसाः परहितं स्वार्थाय निघ्नन्ति ये
ये तु घ्नन्ति निरर्थकं परहितं ते के न जानीमहे ॥१६७॥

தம் கார்யத்தை விட்டாயினும் பிறர் கார்யத்தைச் சீர்படுத்துகின்றவர் ஸஜ்ஜனர் தம் கார்யத்திற்கு விரோதமில்லாமல் பிறர் கார்யத்தைச் சீர்படுத்துகின்றவர் மத்யமர். தம் கார்யத்தின்பொருட்டுப் பிறர் கார்யத்தைக் கெடுப்பவர் மானுஷராக்ஷஸர் (அதாவது அதமர்). தமக்கொரு ப்ரயோஜனமின்றி வ்யர்த்தமாய்ப் பிறருடைய கார்யத்தைக் கெடுப்பவர் யாரோ அறியோம்? (167)

पद्माकरं दिनकरो विकचीकरोति
चन्द्रो विकासयति कैरवचक्रवालम् ।
नाभ्यर्थितो जलधरोऽपि जलं ददाति
सन्तः स्वयं परहिते विहिताभियोगाः ॥ १६८ ॥

ஸூர்யன் தாமரை ஓடையை மலரச்செய்கிறான். சந்திரன் ஆம்பலை மலரச்செய்கிறான். மேகம் யாசிக்கப்படாமலே ஜலத்தை வர்ஷிக்கின்றது. ஸத்புருஷர் இதருக்கு

ஹிதத்தையுண்டாக்குவதில் இயற்கையாகவே முயற்சியுள்ளவர்கள். (168)

गजभुजङ्गविहङ्गमबन्धनं शशिदिवाकरयोर्ग्रहपीडनम् ।
मतिमतां च विलोक्य दरिद्रतां विधिरहो बलवानिति मे मतिः ॥

கஜங்கள், ஸர்ப்பங்கள், பக்ஷிகள் இவை கட்டுப்படுதலையும், சந்த்ர ஸூர்யர், ராஹு கேதுக்களால் பீடையடைதலையும், புத்திமான்களுக்குத் தாரித்ரயத்தையும் பார்த்தால் விதி வலியதேயன்றி மற்றப் பலங்கள் எத்தனையிருந்தாலும் நிஷ்பலமாம் என்பது என் கருத்து. (169)

नैवाकृतिः फलति नैव कुलं न शीलं
विद्याऽपि नैव न च यत्नकृताऽपि सेवा ।
भाग्यानि पूर्वतपसा खलु सञ्चितानि
काले फलन्ति पुरुषस्य यथैव वृक्षाः ॥ १७० ॥

ஸௌந்தர்யம், குலம், ஶீலம், வித்யை, யத்நத்தால் செய்த ஸேவை இவை பலகாரியாகாது. ஜன்மாந்த்ர தபஸ்ஸினால் ஸம்பாதிக்கப்பட்ட பாக்யங்கள் புருஷனுக்கு ப்ராப்திகாலம் வந்தபோது விருக்ஷங்கள் பலிப்பதுபோல் பலிக்கும். (170)

त्यज दुर्जनसंसर्गं भज साधुसमागमम् ।
कुरु पुण्यमहोरात्रं स्मर नित्यमनित्यताम् ॥ १७१ ॥

துர்ஜனர்களுடன் சேர்க்கையை விடு. ஸாதுக்களுடன் ஸங்கத்தைச் செய். இரவும் பகலும் புண்யத்தைச் செய். எப்பொழுதும் அநித்யதையை நினை. (171)

मुखं प्रसन्नं विमला च दृष्टिः कथानुरागो मधुरा च वाणी ।
स्नेहोऽधिकस्संभ्रमदर्शनं च सदानुरक्तस्य जनस्य लक्ष्म ॥१७२

சிரித்த முகமும், தெளிந்த பார்வையும், சொல்லைக் கேட்பதில் விருப்பமும், இன்பமான சொல்லும், விசேஷமான ஸ்நேஹமும், பரபரப்புடன் பார்ப்பதும் இவை ப்ரீதியுள்ளவனுடைய லக்ஷணங்கள். (172)

अतुष्टिदानं कृतपूर्वनाशनम् अमाननं दुश्चरितानुकीर्तनम् ।
कथाप्रसङ्गेन च नामविस्मृतिर्विरक्तभावस्य जनस्य लक्षणम् ॥

த்ருப்தியில்லாமல் கொடுத்தலும், செய்த நன்றியை மறத்தலும், அவமர்யாதையும், கெட்ட நடத்தையைப் புகழ்தலும், ஸம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுதே பேரை மறந்துவிடுவதும் இவை ஸ்நேஹமில்லாதவனுடைய லக்ஷணங்களாம். (173)

गोभिर्विप्रैश्च वेदैश्च सतीभिः सत्यवादिभिः ।
अलुब्धैर्दानशीलैश्च सप्तभिर्धार्यते मही ॥ १७४ ॥

கோக்கள், ப்ராம்ஹணர்கள், வேதங்கள், பதிவ்ரதைகள், ஸத்யவாதிகள், அலுப்தர்கள், தாநஶீலர்கள் ஆகிய இவ்வெழுவராலும் உலகம் பாதுகாக்கப்படுகிறது. (174)

अस्थिरं जीवितं लोके अस्थिरं धनयौवनम् ।
अस्थिरं दारपुत्रादि धर्मकीर्तिद्वयं स्थिरम् ॥ १७५ ॥

வாழ்நாள், தநம், யௌவநம், தாரபுத்ரர்கள் முதலியவை ஸ்திரமில்லாதவைகள். தாம் செய்யும் தர்மம், அதனால் வரும் கீர்த்தி இவ்விரண்டுமே ஶாஸ்வதமானவை.

यत्र विद्यागमो नास्ति यत्र नास्ति धनागमः ।
यत्र चात्मसुखं नास्ति न तत्र दिवसं वसेत् ॥ १७६ ॥

எந்தவிடத்தில் வித்யை, தநம், ஸுகம் இவைகளிலொன்றுமிலும் கிடைக்காதோ அவ்விடத்தில் ஒரு பகல்கூட வாஸம் செய்யக்கூடாது. (176)

असारभूते संसारे सारमेतच्चतुष्टयम् ।
काशीवासः सतां सङ्गो गङ्गाम्भः शंभुपूजनम् ॥१७७॥

ஸாரமில்லாத இந்த ஸம்ஸாரத்தில் காஶீவாஸம், ஸத்ஸங்கம், கங்காஜலம், சிவபூஜநம் இந்த நாலும் ஸாரமானவை. (177)

चत्वारो वित्तदायादा धर्माग्निनृपतस्कराः ।
ज्येष्ठपुत्रावमानेन त्रयः कुप्यन्ति सोदराः ॥ १७८ ॥

ஒருவன் ஸம்பாதித்த பொருளைத் தர்மம், அக்நி, ராஜா, திருடன் என நான்குபேர் புத்ரர்போல் அனுபவிக்கத் தக்கவர்கள். அவர்களில் மூத்தகுமாரனாகிய தர்மத்துக்கு நாலிலொருபங்கு செலவழியாதவன் பொருளை, மற்ற மூன்று பிள்ளைகளாகிய அக்நி, அரசன், கள்ளன் இவர்கள் அபகரிப்பார்கள். (178)

ज्योतिषं व्यवहारं च प्रायश्चित्तं चिकित्सनम् ।
विना शास्त्रेण यो ब्रूयात्तमाहुर्ब्रह्मघातुकम् ॥ १७९ ॥

ஜ்யௌதிஷம், வ்யவஹாரம், ப்ராயச்சித்தம், வைத்யம் இவைகளை ஶாஸ்த்ரமில்லாமல் சொல்லுகிறவன் ப்ரம்மஹத்தி செய்தவனெனப்படுவான். (179)

यन्मनीषिपदाम्भोजरजःकणपवित्रितम् ।
तदेव भवनं नो चेद्भकारस्तत्र लुप्यते ॥ १८० ॥

எந்த க்ருஹமானது வித்வான்களினுடைய பாததூளியினால் பரிஶுத்தம் செய்யப்பட்டதோ அதுதான் பவனம். இல்லாவிடில் அந்த பவனமானது (ப) வென்கிற எழுத்தில்லாத வனமாகும். (என்னவெனில், ஸஜ்ஜனங்கள் வரத்தக்க யோக்கியதையில்லாத வீடு காடாம் என்றபடி.) (180)

दातारं कृपणं मन्ये सर्वमादाय गच्छति ।
अदाता पुरुषस्त्यागी सर्वं दत्त्वैव गच्छति ॥ १८१ ॥

தாதாவானவன் தான் கொடுத்த பொருளையெல்லாம் தான் லோகாந்தரம் போகும்பொழுது ஒன்றுக்கு ஆயிரமாக வாங்கிக்கொண்டு போவதினால் அவனை க்ருபணனென்றும், கொடாதலோபி தான் போகும்பொழுது எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுப் போவதினாலவன் மஹாத்யாகியென்றும் நினைக்கிறேன். (181)

स्त्रिय एव कलौ मृत्युर्विधात्रा कल्पितो गृहे ।
नारीसामान्यमेतत्तु क्वचित्साध्वी प्रकल्पते ॥ १८२ ॥

கலியுகத்தில் ப்ரம்ஹதேவனால் வீடுதோறும் ஸ்த்ரீகளே ம்ருத்யுவாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இது ஸ்த்ரீகள் ஸாமான்யத்துக்கு சொன்னதாதலால் எங்காவது ஸாதுவான ஸ்த்ரீயுமிருப்பாள். (182)

अश्वः शस्त्रं शास्त्रं वीणा वाणी नरश्च नारी च ।
पुरुषविशेषं प्राप्ता भवन्त्ययोग्याश्च योग्याश्च ॥ १८३ ॥

குதிரை, ஆயுதம், ஶாஸ்த்ரம், வீணை, வாக்கு, மனுஷ்யன், ஸ்த்ரீ இவர்கள் எந்த மனுஷ்யனை யடுக்கிறார்களோ அவனது குணத்திற்குத் தக்கபடி யோக்யர்களாயினும், அயோக்யர்களாயினு மாவார். (183)

शतेषु जायते शूरः सहस्रेषु च पण्डितः ।
वक्ता दशसहस्रेषु दाता भवति वा न वा ॥ १८४ ॥

நூற்றிலொருவன் ஶூரனாகவும், ஆயிரத்திலொருவன் பண்டிதனாகவும், பதினாயிரத்திலொருவன் வாக்மியாகவும் உண்டாகுவன். தாதா மாத்திரமிருக்கிறானோ இல்லையோ தெரியாது. (184)

कुक्षौ तिष्ठति यस्यान्नं वेदाभ्यासेन जीर्यति ।
उद्धरेत्सप्त गोत्राणि कुलमेकोत्तरं शतम् ॥ १८५ ॥

வேதமோதுவதினால் ஜீர்ணம் செய்யும் குக்ஷியில் எவனொருவனின் அன்னம் சேருமோ, அந்த அன்னம், இட்டவனை ஏழு கோத்ரத்துடனும், நூறு குலத்துடனும் கடைத்தேறும்படி செய்யும். (185)

सममब्राह्मणे दानं सहस्रं ब्राह्मणब्रुवे ।
अयुतं श्रोत्रिये दानमनन्तं वेदपारगे ॥ १८६ ॥

ப்ராம்ஹணன் தவிர மற்ற ஜாதிகளுக்கு கொடுக்கும் தானமானது கொடுத்ததுபோலவும், ஸ்நானம் முதலான கர்மங்களைச் செய்யாமல் ப்ராம்ஹணனென்கிற பேரைமாத்திரம் வைத்துக்கொண்டு இருப்பவனுக்குக் கொடுக்கும் தானம் ஆயிரம் பங்கு அதிகமாகவும், வேதாத்யயனம் பண்ணி நித்யகர்மானுஷ்டானமும் செய்யும் ப்ராம்ஹணனுக்குச்

செய்கிற தானம் பதினாயிரம் பங்கு அதிகமாகவும், ஸாங்கமாய் வேதாத்யயனம்பண்ணி, கர்மானுஷ்டானமும் செய்கிற ப்ராம்ஹணனுக்குச் செய்கிறதானம் அபரிமிதமாகவும் கொடுத்தவனுக்கு மற்றொரு ஜன்மத்தில் உண்டாகும்.

येषां त्रयी वाग्विधेया तेषां वाचा समीरितम् ।
अलभ्यमपि लभ्यं स्यादिति त्रय्यनुशासनम् ॥ १८७ ॥

வேதங்களை வாக்குக்கு வசமாக்கிய வேதியர் வாக்கினால் சொன்னபடி அஸாத்தியமான காரியங்களும் நடந்தேறி விடுமென்று திருமறையின் கட்டளை. (ஆதலால் அந்த ப்ராம்ஹணர்களை நிந்திக்காமல் ஸந்தோஷப்படுத்தி அவர்களால் ஆசீர்வாதம் பெறவேணுமென்றபடி.) (187)

ब्राह्मणा यानि भाषन्ते मन्यन्ते तानि देवताः ।
सर्वदेवमयो विप्रो न तद्वचनमन्यथा ॥ १८८ ॥

ப்ராம்ஹணர்கள் எதைச்சொல்லுகிறார்களோ, அதை தேவதைகள் ஆமோதிக்கிறார்கள். ப்ராம்ஹணன் ஸர்வதேவ ஸ்வரூபன். ஆகையால் அவன் சொல் வீணாகமாட்டாது. (188)

उपचारः कर्तव्यो यावदनुत्पन्नसौहृदाः पुरुषाः ।
उत्पन्नसौहृदानामुपचारः कैतवं भवति ॥ १८९ ॥

ஸ்நேஹமுண்டாகாத வரையில் ஒருவனைக் கண்டால் உபசாரம் செய்யவேண்டும். ஸ்நேஹமுண்டான பிறகு செய்யும் உபசாரமானது கபடமாகும். ஆதலால் செய்யக்கூடாது. (189)

आन्ध्ये तमसि वार्द्धक्ये कर्दमाम्बुपतत्रिषु ।
श्वानामित्राहिपशुषु दण्डं दशगुणं भवेत् ॥ १९० ॥

குருடு, இருட்டு, மூப்பு, சேறு, தண்ணீர், பக்ஷி, நாய், ஶத்ரு, ஸர்ப்பம், மாடு இவைகளால் தனக்கு ஒரு கஷ்டம் நேரும்பொழுது காப்பாற்றுமாதலால் தண்டம் பத்து குணமுள்ளதாகும். (190)

वाङ्माधुर्यात्सर्वलोकप्रियत्वं वाक्पारुष्यात्सर्वलोकाप्रियत्वम् ।
को वा लोके कोकिलस्योपकारः को वा लोके गर्दभस्यापकारः ॥

கோகிலத்தினிடத்தில் அதன் மதுரத்வனியால் எல்லோருக்கும் ப்ரீதியும், கழுதையினிடத்தில் அதன் க்ரூரத்வனியால் அப்ரீதியும் உண்டாகுதல் போல, எல்லா ஜனங்களுக்கும் இனிய சொற்களால் ஒரு ப்ரீதியும், கடுஞ்சொற்களாலொரு அப்ரீதியும் உண்டாகின்றன. (191)

अहो सुसदृशी वृत्तिः मर्दलस्य खलस्य च ।
यावन्मुखगतं पिण्डं तावन्मधुरभाषणम् ॥ १९२ ॥

கரணைபோடுகிறவரையில் மத்தளமும், ஆஹாரம் போடுகிறவரையில் கோட்சொல்லுகிறவனும் நல்ல சொல்லுடையவராவர். ஆகையால் மத்தளத்திற்கும் துஷ்டனுக்கும் குணம் ஸமானம். (192)

हीनाश्रयो न कर्तव्यः कर्तव्यो महदाश्रयः ।
ईशाश्रयान्महानागः पप्रच्छ गरुडं सुखम् ॥ १९३ ॥

பரமஶிவனை ஆஶ்ரயித்திருப்பதால் பெரிய ஸர்ப்பமானது கருடனைக் குஶலப்ரஶ்நம் செய்தது. ஆகையால் மஹானை ஆஶ்ரயிக்கவேண்டும். அல்பனை ஆஶ்ரயிக்கக்கூடாது. (193)

आपदर्थे धनं रक्षेत् श्रीमतामापदः कुतः ।
सा चेदपगता लक्ष्मीः संचितं च विनश्यति ॥ १९४ ॥

மநுஷ்யர்கள் தங்களுக்குவரும் ஆபத்துக்களுக்காகத் தனத்தைக் காப்பாற்றிவைக்கவேண்டியது. பாக்யவான்களுக்கு ஆபத்துக்கள் ஏது? அந்த லக்ஷ்மீ விலகிப்போய் விடுவாளாகில்? சேர்த்துவைத்த தனமும் போய்விடும். (194)

गुरुं गां दैवतं तीर्थं घृतं मधु चतुष्पथम् ।
प्रदक्षिणं प्रकुर्वीत प्रज्ञातांश्च वनस्पतीन् ॥ १९५ ॥

ஒருமனிதன் போகும்பொழுது வழியிற் காணப்பட்ட குரு, பசு, தைவம், தீர்த்தம், நெய், தேன், நாற்சந்தி, பெருத்த வ்ருக்ஷங்கள் இவைகளை மேன்மைபெறப்ரியமுள்ளவன் ப்ரதக்ஷிணமாகச் செல்லவேண்டும். (195)

भूतां करणसंयुक्तामसतां वागनुव्रजेत् ।
भवित्री तु क्रिया सर्वा सतां वाचमनुव्रजेत् ॥ १९६ ॥

ஸாதாரண மநுஷ்யர்களின் வாக்கு அவர்களறிந்து நடந்த கார்யத்தையும், நடக்கிற கார்யத்தையும் மட்டில் சொல்லும். பெரியோர்களின் வாக்கை நடக்கப்போகிற எல்லாக் கார்யமும் அநுஸரிக்கும். (196)

लभेत सिकतासु तैलमपि यत्नतः पीडयन्
पिबेच्च मृगतृष्णिकासु सलिलं पिपासार्दितः ।
कदाचिदपि पर्यटन् शशविषाणमासादये-
न्न तु प्रतिनिविष्टमूर्खजनचित्तमाराधयेत् ॥ १९७ ॥

மணலை யெடுத்து எந்த பாடாவதுபட்டுப் பிழிந்து எண்ணெயெடுத்தாலு மெடுக்கலாம். அப்படியே தாகமுள்ள

வனும் கானலில் தண்ணீரெடுத்துக் குடித்தாலும் குடிக்கலாம். காட்டில் திரிந்துகொண்டே யிருந்தால் ஒருக்கால் முயல்கொம்பைச் சம்பாதித்தாலும் சம்பாதிக்கலாம். மூர்க்கரின் மனது கோணுமல் நடப்பதுமட்டில் ஸாத்யப்படமாட்டாது. (197)

आपदामापतन्तीनां हितोऽप्यायाति हेतुताम् ।
मातृजङ्घा हि वत्सस्य स्तम्भीभवति बन्धने ॥ १९८ ॥

ஒருவனுக்கு ஆபத்து வரும்பொழுது நல்லதுகூட அந்த ஆபத்துக்கே காரணமாகும். எப்படியென்றால், தன் தாயின் பாலை உண்ணக் கொடுத்துவையாமற் போகுங்காலத்தில் பசுவின் கன்றைக் கட்டிவிட அதன் தாயின்காலே கட்டுத்தறியாகின்றது. (198)

ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे
विष्णुर्येन दशावतारगहने क्षिप्तो महासङ्कटे ।
रुद्रो येन कपालपात्रपुटके भिक्षाटनं सेवते
सूर्यो भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे ॥१९९॥

பானைசெய்யும் குயவன்போல ஓயாமல் ஸ்ருஷ்டிசெய்யும் ப்ரம்ஹாவையும், மஹா ஸங்கடமாகிய ஸம்ஸாரத்தில் தஸாவதாரம் செய்த விஷ்ணுவையும், ப்ரம்ஹகபாலமணிந்து பிச்சை எடுக்கும் பரமஸிவனையும், நிற்க நேரமில்லாமல் ஆகாஸத்திலே ஓடிக்கொண்டிருக்கும் ஸூர்யனையும் பார்த்தால் கர்மம் இவர்களைக்கூடவிடாமல் தொந்தரவு செய்வதால் எல்லாவற்றிற்கும் மீறின அந்த கர்மத்துக்கு நான் நமஸ்காரம் செய்கிறேன். (199)

शशी दिवसधूसरो गलितयौवना कामिनी
सरो विगतवारिजं मुखमनक्षरं स्वाकृतेः ।
प्रभुर्धनपरायणः सततदुर्गतः सज्जनो
नृपाङ्गणगतः खलो मनसि सप्त शल्यानि मे ॥ २००॥

பகற்காலத்துச் சந்திரனும், யௌவனமற்ற ஸ்த்ரீயும், தாமரையில்லாத தடாகமும், அழகுடையவனின் படிப்பில்லாத முகமும், பணத்தில் மிகுந்த ஆசையுள்ள ப்ரபுவும், வித்யதரித்ரனான ஸாதுஜனமும், இராஜனரண்மனையிலுள்ள துஷ்டனுமாகிய இவ்வேழும் என்மனதிற்குச் சங்கடத்தைக் கொடுப்பனவாம். (200)

आकारेणैव चतुरास्तर्कयन्ति परेङ्गितम् ।
गर्भस्थं केतकीपत्रमामोदेनेव षट्पदाः ॥ ॥ २०१ ॥

வண்டானது, வெளியில்வராமல் உள்ளேயிருக்கும் தாழம்பூ மொக்கைக்கூட வாஸனையினால் கண்டறிவதுபோல், புத்திமான்கள் எதிராளியின் ஆக்ருதியினாலேயே அவன் கருத்தை அறிந்துகொள்வார். (201)

राजसेवा मनुष्याणामसिधारावलेहनम् ।
पञ्चाननपरिष्वङ्गो व्यालीवदनचुम्बनम् ॥ २०२ ॥

மநுஷ்யர்களுக்கு, ராஜாவையடுத்து ஸேவிப்பதானது கத்தியின் நுனியை நாவினால் நக்குவதற்கும், ஸிம்ஹத்தைத் தழுவிக் கட்டிக்கொள்ளுவதற்கும், விஷ ஸர்ப்பத்தின் வாயை முத்தமிடுவதற்கும் ஒப்பாகும். (இந்த காரியங்களைச் செய்து மநுஷ்யன் தப்பித்துக்கொண்டாலும், ராஜஸேவை பண்ணித் தப்பித்துக் கொள்ளுவது அரிது என்றபடியாம்.)

अगाधहृदया भूपाः कूपा इव दुरासदाः ।
घटका गुणिनो नोचेत्कथं लभ्येत जीवनम् ॥ २०३ ॥

ராஜாக்கள், நீராழங்காணக்கூடாத கிணறுபோல் யாவராலுமறியக்கூடாத நெஞ்சாழமுள்ளவர்கள். ஆதலால் அந்த ராஜாக்களிடத்திலிருக்கும் ஸாமாஜிகர்கள் ஸத்குணமுள்ளவராயில்லாவிட்டால், கயிறில்லாதபாண்டத்திற்குக் கிணற்றுஜலம் கிட்டாததுபோல், அண்டினபேருக்கு ஜீவனங்கிடைக்கமாட்டாது. घटक என்கிற பதம் ஸாமாஜிகருக்கும் பானைகளுக்கும், गुण என்கிற பதம் ஸத்குணத்திற்கும் கயிற்றிற்கும், जीवनं என்கிற பதம் ஜீவனம் செய்வதற்கும் ஜலத்திற்கும் இரு பொருள் சொற்களாம். (203)

एका भार्या प्रकृतिचपलाऽचञ्चला च द्वितीया
एकः पुत्रस्त्रिभुवनजयी मन्मथो दुर्निरीक्ष्यः ।
शेषः शय्याऽप्युदधिशयनं वाहनं पन्नगारिः
स्मारं स्मारं स्वगृहचरितं दारुभूतो मुरारिः ॥ २०४ ॥

ஒரு பத்நியாகிய லக்ஷ்மி சஞ்சலையாயிருப்பதாலும், மற்றொரு பத்நியாகிய பூதேவி அசைவில்லாதிருத்தலாலும், அழகான ஒரு புத்ரனான மன்மதன் காணக்கிடைக்காதவனாய் விட்டதனாலும், படுக்கை ஸர்ப்பமாயிருப்பதினாலும், அதற்கு இடம் கடலானதாலும், வாஹனம் ஆகாய ஸஞ்சாரியான கருடனானதினாலும், மஹாவிஷ்ணு தம் ஸம்ஸாரத்தின் இவ்வித துக்கங்களை நினைத்து நினைத்து ஜகந்நாதத்தில் மரமாய் விட்டார். (204)

अत्तुं वाञ्छति वाहनं गणपतेर्भूपाभुजङ्गः क्षुधा
तं वाहोऽपि षडाननस्य ललनावाहोऽपि नागाननम् ।

गौरी जह्नुसुतामसूयति कलानाथं ललाटानलो
निर्विण्णः स पपौ कुटुम्बकलहादीशोऽपि हालाहलम् ॥

விக்னேஸ்வரனுடைய வாஹனமாகிய மூஷிகத்தைத் திருவாபரணமாயிருக்கும் ஸர்ப்பமும், அந்த ஸர்ப்பத்தை ஸுப்ரம்ஹண்யருடைய வாஹனமாகிய மயிலும், மூத்த மகனையே பார்வதிதேவிக்கு வாஹனமாகிய ஸிம்ஹமும், ஆஹாரமாக்கிக்கொள்ள எண்ணங்கொண்டிருப்பதினாலும், பார்வதிதேவிக்கும் கங்காதேவிக்கும் நேரிட்டிருக்கும் சக்களத்திப்போராட்டத்தினாலும், சிரோபூஷணமான சந்திரனை நேத்ராக்னியின் தீ எரித்துக்கொண்டிருப்பதினாலும், இந்தக் குடும்பத்தில் ஸம்ஸாரியா யிருக்கக்கூடாதென்று நினைத்து இதையொழிக்க வேணுமென்று விஷமுண்டார் பரமசிவன். (இவ்விரண்டுஸ்லோகங்களினாலும், ஹரிஹரர்களுக்குங்கூட ஸம்ஸாரதுக்கம் விடவில்லை என்பதாம்.)(205)

अनवसरे यत्पठितं सुवचनमपि भवति हासाय ।
रहसि प्रौढवधूनां रतिकाले वेदपाठ इव ॥ २०६ ॥

ஸமயமறிந்து சொல்லைச் சொல்லாவிட்டால், அது நல்ல சொல்லாயிருந்தாலும், நல்ல யௌவனமுள்ள ஸ்த்ரீகளின் க்ரீடாஸமயத்தில் வேதமோதுவதுபோல் பரிஹாஸத்திற்கிடமாகும். (206)

युक्तियुक्तं वचो ग्राह्यं बालादपि शुकादपि ।
अयुक्तं नैव च ग्राह्यं साक्षादपि बृहस्पतेः ॥ २०७ ॥

ஸமயோசிதமான சொல்லைக் கிளி சொன்னாலும், சிறுவன் சொன்னாலும் அதை க்ரஹிக்கவேண்டும். அயுக்தமான

சொல்லாயிருந்தால் ஸாக்ஷாத் ப்ருஹஸ்பதிபகவான் சொன்னாலும் கேட்கலாகாது. (207)

धान्यानि कीर्णानि यथा पृथिव्यां संमार्जनी संचिनुते तथैव ।
मूढस्तथा संचिनुते धनानि दाता च भोक्ता च परोऽस्ति तस्य ॥

பூமியில் சிந்தின தான்யங்களை ஒன்றாகச் சேர்க்கும் விளக்குமாற்றைப்போல் லோபி தனத்தை ஒன்றாகச் சேர்ப்பான். அதை தானம் பண்ணுவதற்கும், அநுபவிப்பதற்கும் வேறு மநுஷ்யனிருப்பதால், இந்த மூடனுக்கு அந்த தனமானது துடைப்பத்திற்கு தான்யம்போல் உதவமாட்டாது. (208)

व्यापारान्तरमुत्सृज्य वीक्षमाणो वधूमुखम् ।
यो गृहेष्वेव निद्राति दरिद्राति स दुर्मतिः ॥ २०९ ॥

இதர கார்யத்தை விட்டுவிட்டு மாதர் முகங்கண்டு மகிழ்ந்துகொண்டு வீட்டிலேயே நித்ரைசெய்யும் மனிதன் நித்ய தரித்ரனாவான். (209)

दीपच्छाया नरच्छाया हन्ति पुण्यं पुरातनम् ।
सा चेद्वेदविदश्छाया हन्ति पापं पुरातनम् ॥ २१० ॥

தீபத்து நிழலும், மனிதர் நிழலும், எந்த மனுஷ்யன் மேல்நாடுமோ அது, அந்த மனிதனுடைய பூர்வபுண்யத்தை அபஹரிக்கும். அதுவே வேதமோதிய வேதியனின் நிழலானால் முன்ஜன்மத்தில் செய்த பாபத்தைப் போக்கும்.

नारायणेति शब्दोऽस्ति वागस्ति वशवर्तिनी ।
तथाऽपि नरके घोरे पतन्तीत्येतदद्भुतम् ॥ २११ ॥

நாராயணவென்கிற சொல்லும், அதை எப்பொழுதுஞ் சொல்ல ஸ்வாதீனமான நாவுமிருக்கும்பொழுதே, மூடஜனங்கள் அந்தத் திருநாமத்தைச் சொல்லிக் கடைத்தேறாமல் நரகத்தில் விழுகின்றார்களென்ற இது ஆச்சர்யம்!

तृणादपि लघुस्तूलस्तूलादपि च याचकः ।
वायुना किं न नीतोऽसौ मामयं याचयेदिति ॥ २१२ ॥

துரும்பைக் காட்டிலும் இலவம் பஞ்சும், அதைக்காட்டிலும் யாசகனும் இலேசானவர்கள். ஆனால் அந்தத் துரும்பு, பஞ்சு இவைகளைப்போல் இந்த யாசகனை ஏன் காற்றடித்துக்கொண்டு போகவில்லையென்றால், கிட்டவந்தால் தன்னையும் ஏதாவது கொடுவென்று கேட்பான் என்கிற அச்சத்தால் காற்றுக்கூடக் கிட்ட நெருங்கவில்லை. (212)

दुर्जनः सज्जनात्पूर्वं पूज्यतां तेन किं सताम् ।
पूर्वं प्रक्षाळितः पाद आननादधिकः किमु ॥ २१३ ॥

துர்ஜனன் ஸஜ்ஜனனுக்கு முந்தியே மரியாதை பெற்றாலும், அது ஸஜ்ஜனனுக்கு இகழ்ச்சியாகாது. (எப்படி என்றால்) காலையிலெழுந்தவுடன் முதலில் கழுவப்பட்ட கால் முகத்தைவிட அதிகமாகுமா? (213)

उपकारिषु यः साधुः साधुत्वे तस्य को गुणः ।
अपकारिषु यः साधुः स साधुः सद्भिरुच्यते ॥ २१४ ॥

தனக்குபகாரஞ் செய்தவரிடத்தில் நல்லோனாயிருப்பதில் என்ன குணம்? அபகாரம் செய்தவரிடத்தில் நல்லோனாயிருப்பவனே ஸத்புருஷனாவான். (214)

श्रुतिस्मृती तु विप्राणां चक्षुषी द्वे विनिर्मिते ।
एकेन हीनः काणः स्यात् द्वाभ्यामन्धः प्रकीर्तितः ॥२१५॥

ப்ராம்ஹணர்களுக்கு வேதமும், ஶாஸ்த்ரமும் இரண்டு கண்கள். அந்த வேதஶாஸ்த்ரங்களில் ஒன்று தெரியாதவன் ஒற்றைக் கண்ணன். இரண்டும் தெரியாதவன் குருடன்.

भोजनं विप्रसंकीर्णं मन्दिरं बन्धुसंयुतम् ।
शयनं सुतसंकीर्णं देहि मे मधुसूदन ॥ २१६ ॥

ஹே பகவானே! எனக்கு ப்ராம்ஹணகோஷ்டியுடன் போஜனமும், பந்துஜனங்கள் நிறைந்த வீடும், புத்ரர்களால் நிறைந்த படுக்கையும் அநுக்ரஹிக்கவேண்டும். இதனால் இம்மூன்றுமில்லாதவன் பாபி என்றாயிற்று. (216)

गणेशः स्तौति मार्जारं स्ववाहस्याभिरक्षणे ।
महानपि प्रसङ्गेन नीचं सेवितुमर्हति ॥ २१७ ॥

பிள்ளையார்கூட தம் வாஹனத்தைக் காப்பாற்றும் நிமித்தம் பூனையை ஸ்துதிக்கின்றார். அதுபோலவே மஹானுக்கும் சில சமயங்களில் அற்பனை ஸேவிக்கும்படி ஏற்படும்.

संतप्तायसि संस्थितस्य पयसो नामापि न श्रूयते
मुक्ताकारतया तदेव नळिनीपत्रस्थितं दृश्यते ।
अन्तःसागरशुक्तिमध्यपतितं तन्मौक्तिकं जायते
प्रायेणाधममध्यमोत्तमजुषामेवंविधा वृत्तयः ॥२१८॥

ஒரு துளி ஜலத்தை எடுத்து நன்றாய்க்காய்ந்த இரும்பின்மேல் விட்டால் அத்துளி இருந்த இடமே தெரியாமல்

போய்விடுகிறது. அதே துளியைத் தாமரை இலையில் விட்டால் முத்துப்போல் காணப்படுகிறது. மறுபடியும் அதே துளியானது ஸமுத்ரத்தின் மத்தியிலுள்ள சிப்பியில் விழுமானால் நிஜமாகவே முத்தாக ஆகிவிடுகிறது. இதுபோல் அதமன், மத்யமன், உத்தமன் இவர்களை அடைவோர்க்கு வரிசையாக அதேமாதிரி பலன்தான் கிடைக்கும். (காய்ந்த இரும்பு அதமனுக்கும், தாமரை இலை மத்யமனுக்கும், முத்துச்சிப்பி உத்தமனுக்கும் உதாஹரணம்.) (218)

प्रारभ्यते न खलु विघ्नभयेन नीचैः
प्रारभ्य विघ्नविहता विरमन्ति मध्याः ।
विघ्नैर्मुहुर्मुहुरपि प्रतिहन्यमानाः
प्रारब्धमुत्तमगुणा न परित्यजन्ति ॥ २१९ ॥

நீசர்கள், விக்னம் வந்துவிடும் என்ற பயத்தினால் ஒரு கார்யத்தையும் ஆரம்பிக்கமாட்டார்கள். மத்யமர்கள் துணிந்து ஆரம்பித்து விக்னத்தினால் தடைபட்டு நின்றுவிடுவார்கள். உத்தமர்கள் அடிக்கடி விக்னங்கள் நேரிட்டபோதிலும், ஆரம்பித்த கார்யத்தை முடிக்காமல் விடமாட்டார்கள். (219)

अधमा धनमिच्छन्ति धनमानौ हि मध्यमाः ।
उत्तमा मानमिच्छन्ति मानो हि महतां धनम् ॥२२०॥

அதமர்கள் பொருளையே விரும்புவார்கள். மத்யமர்கள் பொருள், கௌரவம் இரண்டையும் விரும்புவார்கள். உத்தமர்கள் கௌரவத்தை மாத்திரமே விரும்புவார்கள். ஏனெனில் உத்தமர்களுக்கு கௌரவம்தான் பொருள். (220)

मात्रा समो नास्ति शरीरपोषणे भार्यासमो नास्ति शरीरतोषणे ।
विद्यासमो नास्ति शरीरभूषणे चिन्तासमो नास्ति शरीरशोषणे ॥

தேகத்தைப் போஷிப்பதில் தாயாருக்குச் சமானமும், தேகத்தைச் சந்தோஷப்படுத்துவதில் இல்லாளுக்குச் சமானமும், தேகத்தை அலங்கரிப்பதில் (பூஷணங்களில்) வித்யைக்குச் சமானமும், தேகத்தை இளைக்கச் செய்வதில் சிந்தைக்குச் சமானமானதும் கிடையாது. (221)

वृद्धौ च मातापितरौ साध्वी भार्या सुतः शिशुः ।
अप्यकार्यशतं कृत्वा भर्तव्या मनुरब्रवीत् ॥ २२२ ॥

கிழவர்களான தாய் தந்தையரும், நற்குணமுடைய இல்லாளும், குழந்தையாகிய குமாரனும், செய்யத்தகாத கார்யங்களைச் செய்தாகிலும் காப்பாற்றத் தகுந்தவர்கள் என்று மனு சொன்னார். (222)

खल्वाटो दिवसेश्वरस्य किरणैः संतापिते मस्तके
गच्छन्देशमनातपं द्रुतगतिस्तालस्य मूलं गतः ।
तत्राप्यस्य महाफलेन पतता भग्नं सशब्दं शिरः
प्रायो गच्छति यत्र दैवहतकस्तत्रैव यान्त्यापदः॥२२३

வழுக்கைத்தலையையுடைய ஒரு மனிதன் நடந்துபோகும் பொழுது வெய்யிலினின்றும் தன் தலையைக் காப்பாற்றுவதின் நிமித்தம் நிழலிருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு போகிறவனாய் ஒரு பனைமரத்தினுடைய நிழலில் போய் நின்றான். இவனுடைய கெட்டகாலத்தினால் அவ்விடத்திலும் ஒரு பனம்பழம் இவன் தலையில் விழுந்து இவன் தலை படார் என்று உடைந்தது. அதுபோல் கால

பலம் போதாமலிருந்தால் நாம் வரப்போகிற ஆபத்துக்களினின்றும் தப்பித்துக் கொள்ளவேண்டி எவ்விடம் போனாலும் அந்த ஆபத்துக்கள் அவ்விடத்திலும் வந்து சேரும்.

किं करिष्यन्ति वक्तारः श्रोता यत्र न विद्यते ।
नग्नक्षपणके देशे रजकः किं करिष्यति ॥ २२४ ॥

வஸ்த்ரத்தை உபயோகம் செய்யாத திகம்பரர்களான பௌத்தர்களையுடைய தேசத்தில் வண்ணான் என்ன செய்வான்? அதுபோல், சமயோசிதமாகவும், மிகவும் ஸாமர்த்யமாகவும் பேசும் மநுஷ்யரின் வார்த்தைகளைக் கேட்கத்தகுந்தவர்கள் இல்லாத தேசத்தில் அவர்கள் என்ன செய்யக்கூடும்? (224)

तृणे कृष्णेऽपि ते शक्तिर्दृष्टा मर्त्येषु का कथा ।
त्रैलोक्यव्यापि यद्रूपं तद्रूपं वामनीकृतम् ॥ २२५ ॥

ஓ! ஆசை எனப்படும் தேவியே! உன்னுடைய சக்தியானது பரமாத்மாவான ஸ்ரீமஹாவிஷ்ணுவினிடத்திலேயே ப்ரவர்த்தித்தபொழுது மனுஷ்யரைக் குறித்துச் சொல்வானேன்? ஏனென்றால் மூன்று லோகங்களையும் வ்யாபிக்கிற அவர் ரூபமானது உன்னால் மிகவும் குள்ளமாக செய்யப்பட்டது. (225)

मनस्येकं वचस्येकं कर्मण्येकं महात्मनाम् ।
मनस्यन्यद्वचस्यन्यत्कर्मण्यन्यद्दुरात्मनाम् ॥ २२६ ॥

கற்ற பெரியோர்களுக்கு மனஸ்ஸு நினைத்ததையே வாக்கும் சொல்லி, அதையே கையும் செய்யும். துஷ்டருக்கு மனது ஒன்றை நினைத்து, வாக்கு மற்றொன்றைச் சொல்லி, கைகள் வேறொன்றைச் செய்யும். (226)

प्राचीनग्रन्थमध्यस्थैर्वाक्यैस्तु समयोचितैः ।
नीतिशास्त्रमिदं प्रोक्तं जीयादाचन्द्रतारकम् ॥ २२७ ॥

பெரியோர்கள் செய்த ப்ராசீன க்ரந்தங்களிலிருப்பதும், ஸமயோசிதங்களாயுமுள்ள நற்சொற்களால் சேர்க்கப்பட்ட இந்த நீதிஶாஸ்த்ரமானது சந்த்ரஸூர்யர்களுள்ளவரையில் ஸர்வோத்க்ருஷ்டமாயிருக்கவேண்டும். (227)

நீதி ஶாஸ்திரம் முற்றிற்று.

For copies apply to:—
The Manager,
SRI BALAMANORAMA PRESS,
MYLAPORE, MADRAS.